www.Padasalai.Net www.CBSEtips.in




Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores

சுராவின்

# தமிழ் உரைநூல்

## 10ஆம் வகுப்பு

இலவசம் சுய மதிப்பீடு பயிற்சி நூல்

### சிறப்பம்சங்கள்

- புதிய பாடநூலின்படி, பாடப்பகுதிகளில் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடைகள் தெளிவாகவும் எளிமையாகவும் கொடுக்கப்பட்டுள்ளன.
- திறன் அறிவோம் பகுதி வினாக்கள் பிரிக்கப்பட்டு செய்யுள், உரைநடை, விரிவானம், இலக்கணம் என அந்தந்த பகுதிகளில் புத்தக வினா என்ற தலைப்பில் கீழ் கொடுக்கப்பட்டுள்ளன. இவை தவிர பலவுள் தெரிக, குறுவினா, சிறுவினா, நெடுவினாக்கள் **கூடுதலாக விடைகளுடன் உள்ளே தரப்பட்டுள்ளன.**
- கற்பவை கற்றபின், மொழியோடு விளையாடு, மொழியை ஆள்வோம், மொழித்திறன் பயிற்சிகள் ஆகிய பகுதிகளில் உள்ள **அனைத்து பயிற்சிகளுக்கும் முழு விடைகள் தரப்பட்டுள்ளன.**
- அரசு மாதிரி வினா 2019 (அ.மா.வி.), காலாண்டுத் தேர்வு 2019, அரையாண்டுத் தேர்வு 2019, அரசு துணைத்தேர்வு வினாத்தாட்கள் செப்டம்பர் 2020, செப்டம்பர் 2021, PTA வினாத்தாட்கள் 1 முதல் 6 வரையிலான வினாக்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.



சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

orders@surabooks.com
Ph:9600175757 / 8124301000

Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores



2022-23 பதிப்பு
© வெளியீட்டாளர்கள்

ISBN : 978-93-92559-20-4
குறியீட்டு எண் : SG 42

**எழுதி வழங்கியவர்கள்**

**செ. சசிகலாதேவி,** M.A., M.Phil.,(Tamil) PGDLA

**கி. லதா,** M.A., B.Ed., M.Phil.,

**Also available for Std - XI & XII Standard**

**Guides :**

- **சுராவின் தமிழ் உரைநூல்**
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM)
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Bio-Botany & Botany (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Bio-Zoology & Zoology (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Computer Applications (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

**தலைமை அலுவலகம்:**

1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,

அண்ணா நகர், சென்னை-600 040.

☎ 91-44-4862 9977, 4862 7755 / 81242 01000/ 81243 01000 / வாட்ஸ்அப்: 8124201000

**e-mail :** orders@surabooks.com / **website :** www.surabooks.com

மேலும் விவரங்களுக்கு / தொடர்புக்கு

புத்தகத்தில் உள்ள சந்தேகங்களுக்கு : enquiry@surabooks.com

புத்தகங்கள் வாங்க : orders@surabooks.com

தொடர்புக்கு : 80562 94222 / 80562 15222

வாட்ஸ்அப் : 8124201000 / 9840926027

**ஆன்லைன் வலைதளம்** : www.surabooks.com

பாடக் குறிப்புகளின் தொகுக்கப்பட்ட பகுதிகளை எமது http://tnkalvi.in இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கிக்கொள்ளலாம்



orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores

# பதிப்பாசிரியர் உரை

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. – திருவள்ளுவர்

**எங்கள் வாழ்த்திற்குரிய**

**இனிய மாணவ செல்வங்களே!**

உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டி **'சுராவின் தமிழ் உரைநூல்'** ஆகும். புதிய பாடநூலின்படி உருவாக்கப்பட்டுள்ள **சுராவின்** பத்தாம் வகுப்பிற்கான **தமிழ் உரைநூல்** வழிகாட்டியை உங்களிடம் சேர்ப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம். தேர்வில் நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற சரியான விடைகளுடன், எளிய முறையில் இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

மதிப்பீடு, மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின், இலக்கணம், கூடுதல் வினா விடைகள், மொழித்திறன் பயிற்சிகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

***மாணவர்களாகிய நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனை புரிய வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் இந்த தமிழ் உரைநூல் உருவாக்கம் பெற்றுள்ளது.***

**இறையருளை வேண்டுகிறோம்!**

**நலமே விளைக! . . .**

- பதிப்பகத்தார்

**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,

(சுரா பதிப்பகம்)

**மாணவச் செல்வங்களே...** குறிப்பு:

- பாடப்பகுதியை முழுமையாகப் படிக்கவும்.
- தலைப்பு, ஆசிரியர் குறிப்பு, நுழையும்முன், சொல்லும் பொருளும், பாடலின் பொருள், இலக்கணக்குறிப்பு, பகுபத உறுப்பிலக்கணம், பெட்டிச் செய்தி, நூல்வெளி என அனைத்தையும் ஒரு மதிப்பெண் நோக்கில் படிக்கவும்.
- இலக்கணப் பகுதிகளை எழுதிப் பார்த்தல் நலம்.
- தேர்வில் ஆசிரியர் குறிப்பு, நூற்குறிப்பு கேள்விகள் கேட்கப்பட்டால் கூடுதல் செய்திகள் தவிர்த்து எழுதினால் போதுமானது.
- செய்யுள், உரைநடை, துணைப்பாடம் ஆகிய பகுதிகளில் நெடுவினாக்களுக்கு குறிப்புச் சட்டகம் இட்டு எழுதுதல் முழு மதிப்பெண் பெற வழி வகுக்கும்.
- கதை போல உள்வாங்கி வைத்துக் கொள்ளுங்கள்.



orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores



# பொருளடக்கம்

**மனப்பாடச் செய்யுள் பகுதி** ....................... 1-4

| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|---|
| 1. | மொழி<br>**அமுதஊற்று** | *அன்னை மொழியே! **(செய்யுள்)** | 5-48 | ஜூன் |
| | | தமிழ்ச்சொல் வளம் **(உரைநடை)** | | |
| | | இரட்டுற மொழிதல் **(செய்யுள்)** | | |
| | | உரைநடையின் அணிநலன்கள் **(துணைப்பாடம்)** | | |
| | | எழுத்து, சொல் **(இலக்கணம்)** | | |
| 2. | இயற்கை, சுற்றுச்சூழல்<br>**உயிரின் ஓசை** | கேட்கிறதா என் குரல்! **(உரைநடை)** | 49-94 | ஜூன் |
| | | காற்றே வா! **(செய்யுள்)** | | |
| | | *முல்லைப்பாட்டு **(செய்யுள்)** | | |
| | | புயலிலே ஒரு தோணி **(துணைப்பாடம்)** | | |
| | | தொகைநிலைத் தொடர்கள் **(இலக்கணம்)** | | |
| 3. | பண்பாடு<br>**கூட்டாஞ்சோறு** | விருந்து போற்றுதும்! **(உரைநடை)** | 95-150 | ஜூலை |
| | | காசிக்காண்டம் **(செய்யுள்)** | | |
| | | மலைபடுகடாம் **(செய்யுள்)** | | |
| | | கோபல்லபுரத்து மக்கள் **(துணைப்பாடம்)** | | |
| | | தொகாநிலைத் தொடர்கள் **(இலக்கணம்)** | | |
| | | திருக்குறள் **(வாழ்வியல்)** | | |
| 4. | அறிவியல், தொழில்நுட்பம்<br>**நான்காம் தமிழ்** | செயற்கை நுண்ணறிவு **(உரைநடை)** | 151-191 | ஜூலை |
| | | பெருமாள் திருமொழி **(செய்யுள்)** | | |
| | | பரிபாடல் **(செய்யுள்)** | | |
| | | விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை **(துணைப்பாடம்)** | | |
| | | இலக்கணம் - பொது **(இலக்கணம்)** | | |
| 5. | கல்வி<br>**மணற்கேணி** | மொழிபெயர்ப்புக் கல்வி **(உரைநடை)** | 192-238 | ஆகஸ்ட் |
| | | *நீதிவெண்பா **(செய்யுள்)** | | |
| | | திருவிளையாடற் புராணம் **(செய்யுள்)** | | |
| | | புதிய நம்பிக்கை **(துணைப்பாடம்)** | | |
| | | வினா விடை வகைகள், பொருள்கோள் **(இலக்கணம்)** | | |




www.surabooks.com
orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores

| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|---|
| 6. | கலை, அழகியல், புதுமைகள் **நிலா முற்றம்** | நிகழ்கலை (உரைநடை) | 239-299 | ஆகஸ்ட் |
| | | பூத்தொடுத்தல் (செய்யுள்) | | |
| | | *முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் (செய்யுள்) | | |
| | | *கம்பராமாயணம் (செய்யுள்) | | |
| | | பாய்ச்சல் (துணைப்பாடம்) | | |
| | | அகப்பொருள் இலக்கணம் (இலக்கணம்) | | |
| | | திருக்குறள் | | |
| 7. | நாகரிகம், நாடு, சமூகம் **விதைநெல்** | சிற்றகல் ஒளி(தன் வரலாறு) (உரைநடை) | 300-352 | அக்டோபர் |
| | | ஏர் புதிதா? (செய்யுள்) | | |
| | | மெய்க்கீர்த்தி (செய்யுள்) | | |
| | | *சிலப்பதிகாரம் (செய்யுள்) | | |
| | | மங்கையராய்ப் பிறப்பதற்கே...(துணைப்பாடம்) | | |
| | | புறப்பொருள் இலக்கணம் (இலக்கணம்) | | |
| 8. | அறம், தத்துவம், சிந்தனை **பெருவழி** | சங்க இலக்கியத்தில் அறம் (உரைநடை) | 353-392 | அக்டோபர் |
| | | ஞானம் (செய்யுள்) | | |
| | | *காலக்கணிதம் (செய்யுள்) | | |
| | | இராமானுசர் (நாடகம்) (துணைப்பாடம்) | | |
| | | பா-வகை, அலகிடுதல் (இலக்கணம்) | | |
| 9. | மனிதம், ஆளுமை **அன்பின் மொழி** | ஜெயகாந்தம் (நினைவு இதழ்) (உரைநடை) | 393-431 | நவம்பர் டிசம்பர் |
| | | சித்தாளு (செய்யுள்) | | |
| | | *தேம்பாவணி (செய்யுள்) | | |
| | | ஒருவன் இருக்கிறான் (துணைப்பாடம்) | | |
| | | அணி (இலக்கணம்) | | |
| **மொழித்திறன் பயிற்சிகள்** வாக்கியப் பிழைகளைத் திருத்துதல், மரபுப் பிழையை நீக்கி எழுதுதல், தொடரை மாற்றி அமைத்தல், உவமை தொடரை சொற்றொடராக அமைத்தல் உவமை, உருவக மாற்றுதல், வேற்றுமை உருபுகளை இணைத்து எழுதுதல், இரு பொருள் தரும் ஒரு சொல்(அ) இருபொருள் தருக(அ) பல பொருள் குறிக்கும் ஒரு சொல் எழுதுதல், கவிதைகள், இலக்கிய நயம் பாராட்டல், கடிதம் எழுதுதல், பொதுக் கட்டுரைகள். | | | 432-450 | |

*குறியிடப்பட்டவை மனப்பாடப் பகுதி



orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores

# TO ORDER WITH US

## SCHOOLS and TEACHERS:

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'** Kindly prepare your order in your School letterhead and send it to us.

For Orders contact: 81242 01000 / 81243 01000

## DIRECT DEPOSIT

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **36550290536** |
| Bank Name | : **STATE BANK OF INDIA** |
| Bank Branch | : PADI |
| IFSC | : SBIN0005083 |

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **21000210001240** |
| Bank Name | : **UCO BANK** |
| Bank Branch | : Anna Nagar West |
| IFSC | : UCBA0002100 |

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **6502699356** |
| Bank Name | : **INDIAN BANK** |
| Bank Branch | : ASIAD COLONY |
| IFSC | : IDIB000A098 |

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **1154135000017684** |
| Bank Name | : **KVB BANK** |
| Bank Branch | : Anna Nagar |
| IFSC | : KVBL0001154 |

After Deposit, please send challan and order to our address.
email to : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

**For Google Pay :** **98409 26027**     **For PhonePe :** **98409 26027**

## DEMAND DRAFT / CHEQUE

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**.

The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

## STUDENTS :

Order via Money Order (M/O) to

**SURA PUBLICATIONS**
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar,
Chennai - 600 040.
Phones : 044-4862 9977, 044-486 27755.
Mobile : 96001 75757 / 81242 01000 / 81243 01000.
email : orders@surabooks.com Website : www.surabooks.com

www.surabooks.com



orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores

# மனப்பாடச் செய்யுள்

## அன்னை மொழியே

### அழகார்ந்த செந்தமிழே!

கனிச்சாறு (தொகுதி-1)

**இயல் – 1**

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

பிடிஎ–4, 6; அரையாண்டுத் தேர்வு 2019
செப்.–2021

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

பிடிஎ–1

– பாவலரேறு பெருஞ்சித்திரனார்

## முல்லைப்பாட்டு

### நல்லோர் விரிச்சி கேட்டல்

**இயல் – 2**

சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய
கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர
இன்னே வருகுவர், தாயர்" என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம். – அடி 12–17

பிடிஎ–3; காலாண்டுத் தேர்வு 2019

– நப்பூதனார்

## காசிக்காண்டம்

**இயல் – 3**

விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்
பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்
போமெனில் பின் செல்வதாதல்
பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்
ஒழுக்கமும் வழிபடும் பண்பே.

இல்லொழுக்கம், (பா எண் : 17)

பிடிஎ–2, 5

– அதிவீரராம பாண்டியர்


orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

# திருக்குறள்

| | |
|---|---|
| **மெய் உணர்தல்(36)** | 4. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு. |
| **பெரியாரைத் துணைக்கோடல்(45)** | 8. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே நல்லார் தொடர்கை விடல். பிடிஏ–4,5; செப்.–2021 |
| **கண்ணோட்டம்(58)** | 11. பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம் கண்ணோட்டம் இல்லாத கண். அ.மா.வி 2019; பிடிஏ–2 |
| **ஆள்வினை உடைமை(62)** | 14. அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும் பெருமை முயற்சி தரும்.<br>16. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும். காலாண்டுத் தேர்வு 2019<br>– திருவள்ளுவர் |

# பெருமாள் திருமொழி

**இயல் – 4**

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.

அ.மா.வி 2019; காலாண்டுத் தேர்வு 2019

பாசுர எண் : 691 – குலசேகராழ்வார்

# நீதிவெண்பா

**இயல் – 5**

அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று.

– கா.ப. செய்குதம்பிப் பாவலர்

# திருவிளையாடற்புராணம்

## மன்னன், புலவரிடம் மன்னிப்பை வேண்டுதல்

பிடிஏ–5; செப்.–2020

புண்ணியப் புலவீர் யான் இப்போழ்து இடைக் காடனார்க்குப்
பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப் பரவித் தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லால்
தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத் தணிந்தது என்னா.

பா எண் : 2644
– பரஞ்சோதி முனிவர்

This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores


# முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

## ஆடுக செங்கீரை !

இயல் – 6

பிடிஏ–4

செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்
கட்டிய சூழிய முச்சிய முச்சிக் கதிர்முத் தொடுமாட
வம்பவ ளத்திரு மேனியு மாடிட ஆடுக செங்கீரை
ஆதி வயித்திய நாத புரிக்குக னாடுக செங்கீரை.

செங்கீரைப் பருவம்,
பா.எண். 8
– குமரகுருபரர்

# கம்பராமாயணம்

## பாலகாண்டம் – நாட்டுப்படலம்

இயல் – 6

செப்.–2021

தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்,
கொண்டல்கண் முழவி னேங்கக் குவளை கண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ.

பா.எண். 35

### அயோத்தியா காண்டம் – கங்கைப்படலம்

வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோவெனு மிடையாளொடு மிளையானொடும் போனான்
மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ
ஐயோவிவன் வடிவென்பதொ ரழியாவழ குடையான்.

பா.எண். 1926
– கம்பர்

# திருக்குறள்

| | |
|---|---|
| அமைச்சு (64) | 4. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்<br>தியற்கை அறிந்து செயல். அ.மா.வி 2019; பிடிஏ–1 |
| பொருள்செயல் வகை (76) | 5. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்<br>பொருளல்ல தில்லை பொருள்.<br>8. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்<br>றுண்டாகச் செய்வான் வினை. |

மனப்பாடச் செய்யுள்


orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores



| | |
|---|---|
| குடிசெயல் வகை (103) | 14. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச் சுற்றமாச் சுற்றும் உலகு. பிடிஏ–6 |
| நல்குரவு (105) | 15. இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின் இன்மையே இன்னா தது. |

## சிலப்பதிகாரம்

### மருவூர்ப் பாக்கம்

**இயல் – 7**

அரையாண்டுத் தேர்வு 2019; பிடிஏ–1,6

தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்;
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்;

இந்திரவிழா ஊரெடுத்த காதை
(அடி 18–23) – இளங்கோவடிகள்

## காலக்கணிதம்

**இயல் – 8**

பிடிஏ–3

மாற்றம் எனது மானிடத் தத்துவம்;
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை!
தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!
கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது;
நானே தொடக்கம்; நானே முடிவு;
நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!

– கண்ணதாசன்

## தேம்பாவணி

### இயற்கை கொண்ட பரிவு

**இயல் – 9**

அ.மா.வி 2019; பிடிஏ–2; செப்.–2020

நவமணி வடக்க யில்போல்
நல்லறப் படலைப் பூட்டும்
தவமணி மார்பன் சொன்ன
தன்னிசைக்கு இசைகள் பாடத்
துவமணி மரங்கள் தோறும்
துணர்அணிச் சுனைகள் தோறும்
உவமணி கானம்கொல் என்று
ஒலித்து அழுவ போன்றே.

பா எண் : 2410 – வீரமாமுனிவர்

★★★



orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores

இயல் 1

# அன்னை மொழியே

## கவிதைப் பேழை

– பாவலரேறு பெருஞ்சித்திரனார்

### கரு

* மழலையின் அழகு மிகுந்த சிரிப்பையும், சான்றோர்களின் சிறந்த பட்டறிவையும் கொண்டவள்.
* இவ்வுலகில் உள்ள எல்லாப் பொருள்களையும், தன்னுள் கவிதைகளாக உள்ளடக்கியவள்.
* இறுகிய இதயத்தையும் இனிக்கும் படி செய்பவள். அறிவையும் அன்பையும் வளப்படுத்துபவள். இத்தகைய தமிழ் அன்னையின் பெருமையைப் பாவலரேறு பெருமை பொங்கப் பாடுகிறார்.



### ஆசிரியர் குறிப்பு



**ஆசிரியர்** : பாவலரேறு பெருஞ்சித்திரனார்
பா + வல் + ஏறு = பாவலரேறு
பா – பாடல், வல் – வலிமை மிக்க ஏறு – ஆண் சிங்கம்
(பாடல் எழுதுவதில் ஆண் சிங்கத்தைப் போன்றவர்.)

**இயற்பெயர்** : துரை. மாணிக்கம் ( இதில் – தந்தையின் பெயராகிய துரைசாமி என்பதன் சுருக்கமே துரை)

**பெற்றோர்** : துரைசாமி – குஞ்சம்மாள்

**காலம்** : 10.03.1933 – 11.06.1995 (62)

**பிறந்த ஊர்** : சேலம் மாவட்டம் – சமுத்திரம் என்னும் சிற்றூர்.

**இயற்றிய நூல்கள்** : கனிச்சாறு, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, பள்ளிப் பறவைகள், நூறாசிரியம், உலகியல் நூறு, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி. திருக்குறள் மெய்ப்பொருளுரை (உரைநூல் இது தமிழுக்குக் கருவூலமாக அமைந்தது) போன்ற 40க்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார்.

**நடத்திய இதழ்கள்** : தென்மொழி, (1956) (தமிழ்ச்சிட்டு).

**சிறப்புகள்** : எழுத்தாளர், புலவர், தனித்தமிழ் ஆர்வலர். தனித்தமிழ்க் கொள்கையும் தனித்தமிழ்நாடு கொள்கையும் கொண்டவர். தமிழ்த் தேசியத் தந்தை என அழைக்கப்படுபவர் பாரதிதாசனின் தலைமாணாக்கர். இவரது நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

### நூற் குறிப்பு

* பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் கனிச்சாறு (தொகுதி-1) தொகுப்பிலிருந்து **தமிழ்த்தாய்வாழ்த்து, முந்துற்றோம் யாண்டும்** போன்ற இருவேறு தலைப்புகளில் உள்ள பாடல்கள் பாடப்பகுதியாக உள்ளது.
* கனிச்சாறு 8 பாடல் தொகுதிகளை உடைய ஒரு கவிதை நூலாகும்.

### பாடல்

**அழகார்ந்த செந்தமிழே!**

**அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!**
**முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!**
**கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்**
**மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!**

### சொல்லும் பொருளும்

* அன்னை மொழியே – தாய்மொழியே
* அழகார்ந்த செந்தமிழே – அழகாய் அமைந்த செழுமையான தமிழே
* முன்னைக்கும் முன்னை – பழமைக்கும் பழமையாய்
* முகிழ்த்த நறுங்கனியே – தோன்றிய இனிமையான கனியே
* கடல் கொண்ட – கடலால் கொள்ளப்பட்ட
* கன்னிக் குமரி நாட்டிடையில் – குமரிக்கண்டத்தில்
* மன்னி அரசிருந்த – நிலைத்து அரசாண்ட
* மண்ணுலகப் பேரரசே – இந்தப் பூவுலகின் பேரரசே





orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores





**பொருளுரை**

தாய்மொழியே! அழகே உருவாக அமைந்த செந்தமிழே! பழமைக்கும் பழைமையாய்த் தோன்றிய இனிமையான கனியே! கடலால் கொள்ளப்பட்ட குமரிக் கண்டத்தில் நிலையான ஆட்சியைத் தந்த இந்த மண்ணுலகின் பேரரசே!

**விரிவான விளக்கம்**

உலகின் மிகப் பழமையான நிலப்பகுதி குமரிக்கண்டம். இது இலெமூரியாக் கண்டம் என்றும் அழைக்கப்பட்டது. அந்நிலப் பகுதி கடல்கோளால் (ஆழிப்பேரலை – சுனாமி (TSUNAMI)) மறைந்தது. அந்தத் திராவிடத்தின் தொன்மையான நிலத்தில் தோன்றிய தமிழ்மொழி செழுமையான மொழி, இனிமையான மொழி என்றும் நிலைத்து நிற்கும் மொழி என்றும், செம்மொழி என்றும் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

**பாடல்**

**தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!**
**இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!**
**மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!**
**முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!**

**சொல்லும் பொருளும்**

- ✳ தென்னன் மகளே! – பாண்டிய மன்னனின் மகளே!
- ✳ திருக்குறளின் மாண்புகழே! – திருக்குறளின் பெரும் பெருமைக்கு உரியவளே!
- ✳ இன்னறும் பாப்பத்தே! – இனிமையான பத்துப்பாட்டே!
- ✳ எண்தொகையே! – எட்டுத்தொகையே!
- ✳ நற்கணக்கே! – பதினெண் கீழ்க்கணக்கே!
- ✳ மன்னுஞ் சிலம்பே! – நிலைத்த பெருமையுடைய சிலப்பதிகாரமே!
- ✳ மணிமே கலைவடிவே! – அழகான மணிமேகலையே!
- ✳ முன்னும் நினைவால் – உள்ளத்தில் பொங்கியெழும் சிறப்பான நினைவுகளால்
- ✳ முடிதாழ வாழ்த்துவமே – தலையைத் தாழ்த்தி வணங்குகிறோம்.

**பொருளுரை**

பாண்டிய மன்னனின் மகளே! திருக்குறளின் பெரும் பெருமைக்கு உரியவளே! இனிமையான பத்துப்பாட்டே! எட்டுத்தொகையே! பதினெண் கீழ்க்கணக்கே! நிலைத்த பெருமையுடைய சிலப்பதிகாரமே! அழகான மணிமேகலையே! உள்ளத்தில் பொங்கியெழும் சிறப்பான நினைவுகளுடன் தலையைத் தாழ்த்தி வணங்குகிறோம்.

**விரிவான விளக்கம்**

முதல் சங்கம், இடைச்சங்கம், கடைச் சங்கம் என முச்சங்கங்கள் அமைத்து தமிழை வளர்த்தவர்கள் தமிழகத்தின் தென்பகுதியை ஆண்டு வந்த பாண்டிய மன்னர்களாவர். எனினும், பாண்டிய மன்னன் மகளே! என ஆசிரியர் குறிப்பிடுகிறார். பின்னர் தமிழ் இலக்கியங்கள் ஒவ்வொன்றையும் குறிப்பிட்டு அந்த இலக்கியங்களாகவே தமிழை உருவகப்படுத்தியுள்ளார். பதினெண் மேற்கணக்கு நூல்கள், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற இலக்கியங்களின் வடிவில் அன்னைத் தமிழ் இருக்கிறாள் என்று ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

**பாடல்**

**செப்பரிய நின்பெருமை!**

**செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை**
**எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?**
**முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்**
**விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்**

**சொல்லும் பொருளும்**

- ✳ செந்தமிழே! – செழுமையான தமிழே!
- ✳ உள்ளுயிரே – எமக்குள் வாழும் உயிர் போன்றவளே
- ✳ செப்பரிய – சொல்வதற்கு அரிதாக உள்ள
- ✳ நின்பெருமை – உனது பெருமைகளை
- ✳ எந்தமிழ் நா – என்னுடைய தமிழ் நாக்கு
- ✳ எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்? – எவ்விதம் எடுத்து விரிவாகக் கூறும்?
- ✳ முந்தைத் தனிப்புகழும் – பழம்பெருமையும் தனிச் சிறப்பும் கொண்ட
- ✳ முகிழ்த்த இலக்கியமும் – இலக்கியவளத்துடன் தோன்றிய
- ✳ விந்தை நெடுநிலைப்பும் – வியக்கத்தக்க அளவிலான நெடிய நிலைப்புத் தன்மையும்
- ✳ வேறார் புகழுரையும் – வேற்று மொழியார் உன்னைப் பற்றி கூறிய புகழ் உரைகளும்



orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores



**பொருளுரை**

செழுமையான தமிழே! எமக்குள் வாழும் உயிர் போன்றவளே! பழம் பெருமையும், தனிச்சிறப்பும், இலக்கிய வளமும், வியக்கத்தக்க அளவில் நீண்ட நிலைப்புத் தன்மையும் கொண்ட உன்னை வேற்று மொழியார் புகழ்ந்துரைக்கின்றனர். இவ்விதம் சொல்வதற்கு அரிதாக உள்ள உனது பெருமைகளை என்னுடைய தமிழ் நாக்கு எவ்விதம் விரிவாக எடுத்துக் கூறும்?

**விரிவான விளக்கம்**

வேற்று மொழியாரும் தமிழின் பெருமைகளை அறிந்து போற்றுகின்றனர். ஆனால் எமக்கோ நீ உயிர் போன்றவள். அளவிட முடியாத அளவு பெருமைகளைக் கொண்டுள்ள உன்னை எப்படிப் புகழ்வது, உன் பெருமைகளை விரிவாக எவ்விதம் என்னால் கூற முடியும்? என்று கேட்பது போல தமிழின் பெருமையை உயர்த்திக் கூறியுள்ளார் ஆசிரியர்.

**பாடல்**

**உந்தி உணர்வெழுப்ப உள்ளக் கனல்மூளச்**
**செந்தா மரைத்தேனைக் குடித்துச் சிறகார்ந்த**
**அந்தும்பி பாடும் அதுபோல யாம்பாடி**
**முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே!**

**சொல்லும் பொருளும்**

* உந்தி உணர்வெழுப்ப – பற்றுணர்வு பொங்கி எழ
* உள்ளக் கனல்மூளச் – உள்ளத்திலே நெருப்புத் தோன்ற
* செந்தா மரைத்தேனை – செந்தாமரையில் உள்ள தேனை
* குடித்துச் சிறகார்ந்த – அருந்திவிட்டுச் சிறகு அசைத்து
* அந்தும்பி பாடும் – அந்த வண்டானது பாடும்
* அதுபோல யாம்பாடி – அதைப்போன்று நாங்களும் பாடி
* தனித்தமிழே! – தனிப் பெருமை வாய்ந்த தமிழே!
* முழங்க முந்துற்றோம் யாண்டும் – எங்கும் உன் சிறப்பை முழங்குவதால் பெருமையடைகிறோம்

**பொருளுரை**

செந்தாமரையில் உள்ள தேனைக் குடித்துவிட்டு சிறகசைத்துப் பாடும் வண்டினைப் போல் உன்னைச் சுவைத்து உள்ளத்தில் கனல் மூள, பற்றுணர்வு பொங்கி எழ, உன் சிறப்பை எல்லா இடங்களிலும் முழங்குவதில் பெருமையடைகிறோம்.

**விரிவான விளக்கம்**

தாமரை மலரில் உள்ள தேனைக் குடித்துவிட்டு வண்டானது மகிழ்ச்சியில் சிறகசைத்துப் பாடுவது போல, தமிழ் இலக்கியங்களைக் கற்று, அதன் பொருளை உணர்ந்த மகிழ்வில் நாங்களும் மகிழ்ச்சியில் பெருமை பொங்க உன் சிறப்புகளை உலகெங்கும் முழங்குகின்றோம் என ஆசிரியர் கூறுகின்றார்.

**அருஞ்சொற் பொருள்**

| | |
|---|---|
| 1. அழகார்ந்த – அழகு நிறைந்த | 2. முன்னைக்கும் முன்னை – பழமைக்கும் பழமையான |
| 3. முகிழ்த்த – தோன்றிய | 4. செந்தமிழ் – செழுமையான தமிழ் |
| 5. நறுங்கனியே – நல்ல மணம் வீசும் கனியே | 6. கடல் கொண்ட – கடலால் கொள்ளப்பட்ட |
| 7. மன்னி – நிலையான | 8. பேரரசே – பெருமைக்குரிய அரசே |
| 9. மாண்புகழே! – பெருமைக்குரிய புகழே! | 10. பாப்பத்தே – பத்துப்பாட்டு |
| 11. மன்னுஞ்! – நீண்டகாலம் நிலைத்த | 12. முன்னும் – பொங்கியெழும் |
| 13. முடிதாழ – தலைபணிந்து | 14. செப்பரிய – சொல்லுவதற்கரிய |
| 15. நா – நாக்கு | 16. உரை விரிக்கும் – விரிவாக உரைக்கும் |
| 17. முந்தை – பழமை | 18. விந்தை – வியப்பு |
| 19. கனல் – தீ | 20. வேறார் – மற்றவர் |
| 21. நெடு நிலைப்பும் – நீண்ட காலம் நிலைக்கும் | 22. தும்பி – வண்டு |





orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores



| | |
|---|---|
| 23. முந்துற்றோம் – முற்பட்டோம் | 24. யாண்டும் – எங்கும் |
| 25. உந்தி – உள்ளிருந்து மேல்நோக்கி நகர்ந்த | 26. எண் தொகையே – எட்டு நூல்கள் தொகுக்கப்பட்ட எட்டுத்தொகை |
| 27. தென்னன் – தென்னாடு எனப்பட்ட பாண்டிய நாட்டை ஆண்ட பாண்டியன் | |
| 28. இன்னறும் – இனிமையும் அறவழியும் கொண்ட (அறு என்ற வினைச் சொல்லின் அடி) | |
| 29. நற்கணக்கு! – நல்ல கணக்கு இங்கு நற்கணக்கு என்பது பதினெண் கீழ்க்கணக்காகும். | |
| 30. ஆர்ந்த – 'நிறைந்த' என்ற பொருளில் ஒரு பெயர்ச்சொல் (பெயரடை) | |
| 31. தனித்தமிழ் – பிற மொழி சொற்களின் கலப்படமின்றி மரபு சார்ந்த இலக்கண முறைகளுக்கு உட்பட்டு எழுதப்படும், பேசப்படும் தமிழே தனித்தமிழ் ஆகும். | |

## பிரித்தெழுதுக

| | |
|---|---|
| 1. செந்தமிழ் – செம்மை + தமிழ் | 6. செப்பரிய – செப்பு + அரிய |
| 2. நறுங்கனி – நறுமை + கனி | 7. உணர்வெழுப்ப – உணர்வு + எழுப்ப |
| 3. நாட்டிடையில் – நாடு + இடையில் | 8. பேரரசு – பெருமை + அரசு |
| 4. மண்ணுலகம் – மண் + உலகம் | 9. எந்தமிழ் நா – எம் + தமிழ் + நா |
| 5. நற்கணக்கு – நன்மை + கணக்கு | 10. செந்தாமரை – செம்மை + தாமரை |

## இலக்கணக் குறிப்பு

| | |
|---|---|
| 1. செந்தமிழ், நறுங்கனி, செந்தாமரை, பேரரசு | பண்புத்தொகைகள் |
| 2. முகிழ்த்த, சிறகார்ந்த | பெயரெச்சங்கள் |
| 3. கன்னிக்குமரி, மண்ணுலகம் | உருவகங்கள் |
| 4. தென்னன் மகள் | இரண்டாம் வேற்றுமைத் தொகை |
| 5. நின்பெருமை | ஆறாம் வேற்றுமைத் தொகை |
| 6. குடித்து | வினையெச்சம் |
| 7. வாழ்த்துவமே, முந்துற்றோம் | தன்மைப் பன்மை வினைமுற்றுகள் |
| 8. யாண்டும் | முற்றும்மை |

# திறன் அறிவோம் - புத்தக வினா

## பலவுள் தெரிக.

கேள்வி எண்: 3 புத்தக பக்கம் எண்: 19

காலாண்டுத் தேர்வு 2019

3. **எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.**
அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

விடை **இ) எம் + தமிழ் + நா**

## கூடுதல் வினாக்கள்

1. **பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் ...................**
அ) துரை.மாணிக்கம் ஆ) தி. இராசகோபாலன் இ) துரைராசு ஈ) எத்திராசலு

2. **'தென்னன் மகளே!' இத்தொடரில் தென்னன் என்பவர்................**
அ) சேரன் ஆ) சோழன் இ) பாண்டியன் ஈ) பல்லவன்

3. **நிலைத்த நூலென பாவலரேறு எதை குறிப்பிடுகிறார்?**
அ) எட்டுத்தொகை ஆ) சிலப்பதிகாரம் இ) பத்துப்பாட்டு ஈ) மணிமேகலை

4. **பெருஞ்சித்திரனாரின் எந்தப் படைப்பு தமிழுக்குக் கருவூலமாய் அமைந்தது?**
அ) உலகியல் நூறு ஆ) திருக்குறள் மெய்ப்பொருளுரை
இ) கனிச்சாறு ஈ) எண்சுவை எண்பது

5. **'கனிச்சாறு' என்ற கவிதை நூலைப் படைத்தவர்.....................**
அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆ) தாராபாரதி
இ) வாணிதாசன் ஈ) முடியரசன்

6. **செந்தமிழ் – என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.**
அ) செந் + தமிழ் ஆ) செம் + தமிழ் இ) செம்மை + தமிழ் ஈ) செ + தமிழ்



orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores





24. 'பாப்பத்தே' என்பது ............... நூல்களைக் கொண்டது.
அ) 8 ஆ) 5 இ) 18 ஈ) 10

25. பொருந்துவதைத் தேர்க.
அ) கனிச்சாறு ஆ) தமிழ்ச்சிட்டு இ) பாவியக் கொத்து ஈ) எண்சுவை எண்பது
1) அ, ஆ, இ 2) அ, இ, ஈ 3) அ, ஈ 4) ஆ மட்டும்

26. தமிழ் முத்தமிழாய் வளர்ந்தது இதில் முத்தமிழ் என்பவை .................
அ) விண்ணோடும், முகிலோடும் ஆ) கதிரவனோடும், கடலோடும்
இ) இயல், இசை, நாடகம் ஈ) இவை அனைத்தும்

27. அறிவைப் பெருக்குபவள்; அன்பை வயப்படுத்துபவள் எனக் கவிஞர் எதை உருவகப்படுத்துகிறார்?
அ) உலகம் ஆ) நாடு இ) கடல் ஈ) மொழி

28. பேரரசு என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.
அ) பேர் + அரசு ஆ) பெருமை + அரசு இ) பெரு + அரசு ஈ) பேர + அரசு

29. பாண்டிய மன்னனின் மகளாகப் பாவலரேறு எதைக் குறிப்பிடுகிறார்?
அ) தமிழை ஆ) நாட்டை இ) மொழியை ஈ) இலக்கியத்தை

30. தமிழ்ச்சிட்டு, தென்மொழி போன்றவை ..............
அ) கவிதைகள் ஆ) உரைநடை நூல்கள் இ) இதழ்கள் ஈ) சிறுகதை நூல்கள்

**விடைகள்:**

| | | |
|---|---|---|
| 1. அ) துரை.மாணிக்கம் | 2. இ) பாண்டியன் | 3. ஆ) சிலப்பதிகாரம் |
| 3. ஆ) திருக்குறள் மெய்ப்பொருளுரை | 5. அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார் | 6. இ) செம்மை + தமிழ் |
| 7. ஈ) வண்டு | 8. ஈ) செம்மை + தாமரை | 9. அ) திருக்குறள் |
| 10. இ) தென்மொழி, தமிழ்ச்சிட்டு | 11. அ) தமிழ் மொழி | 12. ஆ) தமிழ் அன்னை |
| 13. இ) பண்புத் தொகை | 14. ஈ) கனிச்சாறு | 15. அ) கவிதை |
| 16. ஆ) க.சச்சிதானந்தன் | 17. இ) முல்லைப் பாட்டு | 18. ஈ) பரிபாடல் |
| 19. ஆ) 4, 1, 2, 3 | 20. ஆ) கனிச்சாறு | 21. ஈ) 8 |
| 22. ஆ) 3, 1, 2, 4 | 23. ஆ) சீர்மோனை,அடிஎதுகை | 24. ஈ) 10 |
| 25. 2) அ. இ. ஈ | 26. இ) இயல், இசை, நாடகம் | 27. ஈ) மொழி |
| 28. ஆ) பெருமை + அரசு | 29. அ) தமிழை | 30. இ) இதழ்கள் |

## திறன் அறிவோம் - புத்தக வினா

**குறுவினா** | கேள்வி எண்: 2 | புத்தக பக்கம் எண்: 19

அ.மா.வி 2019

2. 'மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!' -இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
(i) சீவகசிந்தாமணி (ii) வளையாபதி (iii) குண்டலகேசி

## கூடுதல் வினாக்கள்

1. பெருஞ்சித்திரனார் இயற்றிய நூல்கள் யாவை?
**பெருஞ்சித்திரனார் இயற்றிய நூல்கள்:** உலகியல் நூறு, பாவியக்கொத்து, நூறாசிரியம், கனிச்சாறு, ஐயை எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி, பள்ளிப் பறவைகள் முதலியன.

2. பெருஞ்சித்திரனார் எமக்குயிர் என எதனைக் கூறுகிறார்?
பெருஞ்சித்திரனார் 'தமிழே' எமதுயிர் எனக் கூறுகிறார்.

3. வண்டைப் போல் நாம் என்ன செய்வதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்?
செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடும் வண்டைப் போல நாம் தமிழைச் சுவைத்து தமிழின் பெருமையை முழங்குவதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

4. அன்னை மொழிப் பாடலை அழகாக்கும் நூல்கள் யாவை?
**அன்னை மொழிப் பாடலை அழகாக்கும் நூல்கள்:**
திருக்குறள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை.



orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores



5. **'முந்துற்றோம் யாண்டும்' - எனப் பெருஞ்சித்திரனார் கூறுவது யாது?**

**உள்ளிருந்து பற்றுணர்வு பொங்கி எழ:**

உள்ளத்திலே இன்பத் தீ தோன்றுகிறது. செந்தாமரை மலரில் உள்ள தேனை அருந்திவிட்டுச் சிறகு அசைத்து பாடும் வண்டைப் போல, நாங்களும் உன்னைச் சுவைத்து உனது சிறப்புகளை எல்லா இடங்களிலும் பாடுகிறோம் என்கிறார்.

## திறன் அறிவோம் - புத்தக வினா

**சிறுவினா** கேள்வி எண்: 1 புத்தக பக்கம் எண்: 20

1. **தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?** பிடிஏ–2

**தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்கள் :**

(i) தமிழ்மொழி பழமைக்குப் பழமையாய் உள்ளது.
(ii) கடல்கொண்ட குமரிக்கண்டத்தில் நிலைத்து ஆட்சி செய்தது.
(iii) பாண்டிய மன்னனின் மகளாக வளர்ந்தது.
(iv) திருக்குறளின் பெருமைக்கு உரியதாய் விளங்குகிறது.
(v) பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களாக அமைந்துள்ளது.
(vi) நிலைத்து நிற்கும் சிலப்பதிகாரமாகவும், அழகான மணிமேகலையாகவும் விளங்குகிறது.

## கூடுதல் வினா

1. **பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் யாவை?**

| பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் – 18 | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | நாலடியார் | 7 | ஐந்திணை ஐம்பது | 13 | ஆசாரக் கோவை |
| 2 | நான்மணிக் கடிகை | 8 | ஐந்திணை எழுபது | 14 | பழமொழி நானூறு |
| 3 | இன்னா நாற்பது | 9 | திணைமொழி ஐம்பது | 15 | சிறுபஞ்ச மூலம் |
| 4 | இனியவை நாற்பது | 10 | திணைமாலை நூற்றைம்பது | 16 | முதுமொழிக் காஞ்சி |
| 5 | கார் நாற்பது | 11 | திருக்குறள் | 17 | ஏலாதி |
| 6 | களவழி நாற்பது | 12 | திரிகடுகம் | 18 | கைந்நிலை |

## திறன் அறிவோம் - புத்தக வினா

**நெடுவினா** கேள்வி எண்: 1 புத்தக பக்கம் எண்: 20

1. **மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.** பிடிஏ–5 அ.மா.வி, காலாண்டுத் தேர்வு 2019

| குறிப்புச்சட்டகம் |
|---|
| 1. முன்னுரை |
| 2. பெ.சுந்தரனார் தமிழ்த்தாய் வாழ்த்து |
| 3. பாவலரேறு தமிழ் வாழ்த்து |
| 4. முடிவுரை |

**முன்னுரை:**

**தமிழ் எங்கள் உயர்வுக்கு வான் – இன்பத்**
**தமிழ் எங்கள் அசதிக்கு சுடர்தந்த தேன்!**

என்ற பாவேந்தரின் தமிழ்ப்பற்றைப் போற்றி வணங்குகிறேன். அனைவருக்கும் வணக்கம்.

தமிழ்த்தாய் இன்று நேற்றுப் பிறந்தவள் இல்லை. என்று தோன்றியவள் என்று கூறமுடியாத அளவிற்கு பழமையும் சிறப்பும் வாய்ந்தவள். அத்தகைய தமிழ் அன்னையைப் பாடாத புலவரில்லை. இங்கு மனோன்மணீயம் அவர்களின் தமிழ்த்தாய் வாழ்த்தையும் பாவலரேறு அவர்களின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு பார்ப்போம்.

**பெ.சுந்தரனார் தமிழ்த்தாய் வாழ்த்து:**

✳ அலைவீசக்கூடிய கடலையே ஆடையாக அணிந்திருக்கிறது இந்த நாடு.
✳ இந்த நாட்டை பெண்ணாக உருவகம் செய்கிறார்.
✳ அப்பெண்ணின் நெற்றியிலிட்ட திலகம் மணம் வீசுவதாக கூறுகிறார்.





orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

## கற்பவை கற்றபின்

1. ‘‘நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று
இத்திறத்த எட்டுத்தொகை’’
**இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள எட்டுத் தொகை நூல்களைப் பெயர்க்காரணத்துடன் எடுத்துக்காட்டுக.**

(i) **நற்றிணை :** நல் + திணை / நன்மை + திணை. 'நல்' என்னும் அடைமொழியும் அகப்பொருள் ஒழுக்கத்தைச் சுட்டும் 'திணை' என்னும் பெயரும் சேர்ந்து 'நற்றிணை' என்னும் பெயர் பெற்றது.

(ii) **குறுந்தொகை :** குறுமை + தொகை. குறைந்த அடிகள் கொண்ட பாடல்களின் தொகுப்பாக இருப்பதால் குறுந்தொகை எனப் பெயர்பெற்றது.

(iii) **ஐங்குறுநூறு :** ஐந்து + குறுமை + நூறு = ஐங்குறுநூறு. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகைத் திணை குறித்த குறுகிய நூறு பாடல்களாகத் தொகுக்கப்பட்டதால் 'ஐங்குறுநூறு' எனப் பெயர் பெற்றது.

(iv) **பதிற்றுப்பத்து :** சேர மன்னர்கள் பதின்மரைப் பற்றிப் பத்துப் புலவர்கள் பாடிய தொகுப்பு நூலாகும். ஒரு மன்னருக்குப் பத்துப் பாடல்கள் என்னும் முறையில் நூறு பாடல்களைக் கொண்டுள்ளதால் 'பதிற்றுப்பத்து' எனப் பெயர் பெற்றது.

(v) **பரிபாடல் :** வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நால்வகைப் பாக்களுக்கும், பல வகை அடிகளுக்கும் பரிந்து இடங்கொடுத்து பரிந்து செல்லும் ஓசையையுடைய பரி பாட்டுகளின் தொகுப்பாக விளங்குவதால் இது 'பரிபாடல்' என்று அழைக்கப்படுகிறது.

(vi) **கலித்தொகை :** ஓசை இனிமையும், தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்னும் சிறப்பான அமைப்புகளையும், கொண்ட கலிப்பாக்களால் அமைந்த நூலாதலால் கலித்தொகை எனப் பெயர் பெற்றுள்ளது.

(vii) **அகநானூறு :** அகம் + நான்கு + நூறு – அகநானூறு. அகப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்ட நூல் என்பதால் 'அகநானூறு' எனப் பெயர் பெற்றது.

(viii) **புறநானூறு :** புறம் + நான்கு + நூறு – புறநானூறு. இது புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்ட நூல் என்பதால் 'புறநானூறு' எனப் பெயர் பெற்றது.

2. **‘‘எந்தமிழ்நா நின் பெருமை எடுத்தே உரைவிரிக்கும்’’ என்ற பாடலடியைக் கொண்டு வகுப்பறையில் ஐந்து நிமிட உரை நிகழ்த்துக.**

உலகில் உள்ள தொன்மையான மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்று என்றால் மிகையாகாது. இன்றும் எழுத்தளவிலும் பேச்சளவிலும் தன் தொன்மையைக் காத்து சீரும் சிறப்போடும் வாழ்ந்து கொண்டிருக்கிறது நம் தமிழ் மொழி.

தமிழ்மொழி தொன்மை, எளிமை, ஒண்மை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, பெருமை, இயன்மை, வியன்மை எனப் பலவகை பெருமைகளை ஒருங்கேயுடையது என்கிறார் ஞா.தேவநேயப் பாவாணர்.

முண்டாசு கவிஞன் மகாகவி பாரதி அவர்கள்,

“யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்” என்றார்.

அந்தளவிற்குத் தமிழ்மொழியின் பெருமையை உலகறியும். மேலும் தமிழ்மொழி இயற்கையாகவே பேசுவதற்கு எளிமையாக அமைந்திருப்பதால் நாம் தமிழ் எழுத்துகளை எளிதாக உச்சரிக்கலாம்.தமிழின் சிறப்பை உணர்ந்த மேலைநாட்டு அறிஞர் டாக்டர் ஜி.யு.போப்., தமிழை நன்கு கற்று அதன் சிறப்பினை உணர்ந்ததால் தமது கல்லறையில் “இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்” என்று பொறிக்கச் செய்தார்.

உலகின் மூத்த மொழி தமிழ்மொழி. மூத்தக்குடி வளர்த்த மொழியாம் தமிழ்மொழி மற்ற மொழிகளைக் காட்டிலும் இனிமையும், பெருமையும் பல்வேறு இலக்கிய தொன்மைகளையும் இயல், இசை, நாடகம் என்று முத்தமிழ் கொண்ட மொழியாம் நம் தமிழ் மொழி, தமிழ்மொழிக்கு ஈடு இணை இவ்வுலகில் எந்த மொழியும் இல்லையென பெருமையாக எடுத்துரைப்பேன். எந்தன் தமிழின் பெருமையை உலக அரங்கு முழுக்க எடுத்துரைப்பேன் அதுவே நான் செய்த பாக்கியம் என்று பலரும் கூறுகின்றனர்.

☆☆☆

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores



# அலகுத் தேர்வு

**நேரம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (4 × 1 =4 )

1. 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது–
   அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்
   ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
   இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்
   ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்
2. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்
   அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா
   இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா
3. '<u>காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்</u> நிலத்துக்கு நல்ல உரங்கள், இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது –
   அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்
   இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்
4. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' – தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே–
   அ) பாடிய ; கேட்டவர் ஆ) பாடல் ; பாடிய
   இ) கேட்டவர் ; பாடிய ஈ) பாடல் ; கேட்டவர்

**II. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்க.** (2 × 2 = 4)

5. 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.
6. பூவின் நிலைகளை எழுதுக.
7. 'மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே! முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!' – இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள ஐம்பெருங்காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
8. முதனிலைத் தொழிற்பெயர் என்றால் என்ன?

**III. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து வரிகளில் விடையளிக்க.** (2 × 3 = 6)

9. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.
10. ஒரு தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிப்பதற்கான சொற்களை விளக்குக.
11. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

**IV. அடிபிறழாமல் எழுதுக.** (1 × 3 = 3)

12. 'அன்னை மொழியே' – எனத் தொடங்கும் பாடலை அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.

**V. விடையளி (ஏதேனும் ஒன்று).** (1 × 8 = 8)

13. மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.
14. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

☆ ☆ ☆



orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or
Availablve at All Leading Bookstores

# இயல் 2

# கேட்கிறதா என் குரல்!

## உரைநடை உலகம்

**கரு**



- ✳ காற்றின் முக்கியத்துவம், காற்றின் பெயர்கள், திசைக் காற்றுகள் – பெயர்
- ✳ இலக்கியத்தில் காற்று
- ✳ மழை, புயல், ஆற்றல், காற்றுமாசு, உயிர்வளி தரும் மரம் போன்ற கருத்துகள் பாடத்தின் உள்ளே விவாதிக்கப்படுகிறது.

## திறன் அறிவோம் - புத்தக வினா

**பலவுள் தெரிக :** கேள்வி எண்: 2,5 புத்தக பக்கம் எண்: 43

| 9. | மாணவர் நூலகம் பயன்படுத்த வேண்டும். | மாணவர்கள் நூலகத்தைப் பயன்படுத்த வேண்டும். |
| 10. | நண்பர்களுடன் குமரன் கோவில் சென்றான். | நண்பர்களுடன் குமரன் கோவிலுக்குச் சென்றான். |

## இரு பொருள் தரும் ஒரு சொல் (அ) இருபொருள் தருக (அ) பல பொருள் குறிக்கும் ஒரு சொல்

| சொல் | இருபொருள்/ பலபொருள் | சொல் | இருபொருள்/ பலபொருள் | சொல் | இருபொருள்/ பலபொருள் |
|---|---|---|---|---|---|
| அரி | திருமால், சிங்கம் | அடவி | காடு, மிகுதி | நூல் | புத்தகம், நூல்இழை |
| அணி | அழகு, ஆபரணம் | ஆறு | எண், நதி | மெய் | உடல், உண்மை |
| அஞ்சு | ஐந்து, பயப்படு | ஆழி | மோதிரம், கடல் | நாமம் | பெயர், அச்சம் |
| ஆ | பசு, உயிரெழுத்து | அளி | வண்டு, தொடு | உரை | மொழி, பசு |
| அமர் | போர், உட்கார் | அரவம் | பாம்பு, ஒலி | புலம் | நிலம், நாடு |
| அவா | ஆசை, நாட்டம் | அல் | இரவு, அல்லல் | நங்கை | பெண், பாவை |
| இரவி | சூரியன், மலை | இசை | பண், இராகம் | நமன் | எமன், நம்மவன் |
| ஆக்கம் | செல்வம் உயர்வு | அழகு | எழில், அணி | கான் | காடு, மணம் |
| இன்னல் | துன்பம், கவலை | பௌவம் | கடல், ஆழம் | நுதல் | நெற்றி, புருவம் |
| இந்து | நிலவு, சந்திரன் | தெறு | பகை, தண்டித்தல் | பார் | உலகம், பார்த்தல் |
| கரி | யானை, நஞ்சு | மறை | வேதம், மறைத்தல் | நடலை | துன்பம், அசைவு |
| புத்தி | அறிவு, மனம் | வேய் | மூங்கில், கூரைவேய் | கொண்டல் | காற்று, வளி |
| பிணி | நோய், துன்பம் | விரை | மணம், தேன் | குஞ்சி | தலைமுடி, விருது |
| கோடு | தந்தம், கொம்பு | சிரம் | தலை, உச்சி | கதம் | சினம், பாவம்,இன்பம் |
| கேசரி | சிங்கம், இனிப்பு | கோது | குற்றம், தடவு | ஈ | பறவை, கொடு, இரத்தல் |
| வேழம் | கரும்பு, யானை | கார் | மேகம், எழில் | பாம்பு | பாந்தள், உரகம், பன்னகம், அரவு |

## கவிதைகள்

**முயற்சி**

மரத்தில் தொங்கியது அழகிய கூடு
தூக்கணாங் குருவியின் முயற்சி கண்டு வியந்தேன்
சுவரின் மூலையில் பின்னலான வலை
சிலந்தியின் முயற்சி கண்டு வியந்தேன்
கற்காலம் மாறியது நவீன யுகமாய்
மனிதனின் முயற்சி கண்டு வியந்தேன்
வியந்தால் போதுமா வெற்றி வேண்டாமா?
தோல்வி விதையில் முயற்சியெனும் உரமிட்டு
வெற்றிப் பயிரை அறுவடை செய்ய
நான் தயாராகிவிட்டேன். நீங்கள்?

**உழைப்பு**

உழைப்பு இல்லையேல்
உணவும், மகிழ்ச்சியும்
இல்லை இன்று
உழைத்தால் வயதான போது
உட்கார்ந்து உண்ணலாம்
உழைக்க வேண்டிய காலத்தில்
உழைக்கவில்லை என்றால்
ஓய்வு எடுக்க வேண்டிய
காலத்தில் உழைக்க வேண்டும்
உயிரினங்கள் கூட உழைக்கின்றன
கையிருந்தும் உழைக்காமல்
இருந்தால் வாழ்க்கை இல்லாமலாகும்.



orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores



**8. கொரோனா பெருந்தொற்று ஊரடங்குக் காலத்தில் உங்கள் நேரத்தை எவ்வாறு பயனுறக் கழித்தீர்கள் என்பதை நண்பனுக்கு விவரித்துக் கடிதம் எழுதுக.** செப்.–2021

அன்பு நண்பன் அகிலனுக்கு,

உன் அன்பு நண்பன் எழிலன் எழுதும் கடிதம். இங்கு நானும் என் குடும்பத்தினரும் நலமாக உள்ளோம். அங்கு நீயும் உன் குடும்பத்தாரும் நலமாக இருப்பீர்கள் என நம்புகிறேன். அகிலா! கொரோனா நம் வாழ்வை மாற்றிப்போட்டுவிட்டது. இருப்பினும் ஊரடங்கு காலத்தில் நான் நேரத்தை வீணாக்காமல் பயனுள்ள வகையில் செலவழித்தேன்.

என் பெற்றோரின் அறிவுரைப்படி வீதிகளிலும் வீடியோ கேம்களில் நேரத்தை வீணாக்காமல், கடைக்கு செல்வது, வீட்டுத் தோட்டம் பராமரித்தல், சிலம்பம், நீச்சல் போன்ற பயனுள்ள விளையாட்டுகளை கற்றுக்கொண்டேன். பாரதியாரின் கவிதைகளை வாசித்து அக மகிழ்ந்தேன், தேசத்தலைவர்களின் வாழ்க்கை வரலாறு புத்தகங்கள் படித்து உளம் பூரித்தேன். இவ்வாறாக கொரோனா பெருந்தொற்று ஊரடங்கு காலத்தில் நான் பயனுள்ள வகையில் நேரத்தை செலவழித்தேன். நீயும் பயனுள்ள வகையில் நேரத்தை செலவழித்திருப்பாய் என நம்புகிறேன். பதில் கடிதம் எழுது!

இப்படிக்கு
உன் அன்பு தோழன்
**எழிலன்**

**உறைமேல் முகவரி:**

பெறுநர்
அகிலன்
15, வடக்கு மாடவீதி, மதுரை -1

---

## பொதுக் கட்டுரைகள்

**1. குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதித் தலைப்பிடுக.**
**குறிப்புகள் : முன்னுரை – தமிழர் பண்பாட்டில் விருந்து – தமிழர் உணவுமுறை – விருந்தோம்பல் தமிழர் பண்பாட்டின் மகுடம் – முடிவுரை.**

### தமிழரின் விருந்து போற்றும் நெறி

**முன்னுரை :** விருந்தினரை உளமார வரவேற்று விருந்தளிக்கும் தமிழரின் முறை குறித்து சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. விருந்தோம்பல் என்பது அவர்கள் பசியைத் தீர்ப்பது மட்டுமல்ல; அவர்கள் மனம் கோணாமல் நடந்து கொள்ளும் முறையையும் உள்ளடக்கியதாகும். அத்தகைய தமிழரின் நெறி பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**தமிழர் பண்பாட்டில் விருந்து :**

'விருந்தோம்பல்' என்று ஓர் அதிகாரத்தையே திருவள்ளுவர் படைத்து விருந்தோம்பலின் முக்கியத்துவத்தைக் கூறியுள்ளார்.

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு." என்ற குறளின் வாயிலாக இல்லறம் புரிவது விருந்தோம்பல் செய்யும் பொருட்டே என்கிறார். முகம் வேறுபடாமல் முகமலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும் என்பதை "மோப்பக் குழையும் அனிச்சம்" என்ற குறளின் மூலம் எடுத்துரைக்கிறார்.

**தமிழர் உணவு முறை :**

ஔவையார் எழுதிய "வரகரசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்" என்று தொடங்கும் தனிப்பாடலில், புள்வேளூர் பூதன் என்பவர் தனக்கு அளித்த வரகரிசிச் சோறு, கத்தரிக்காய் வதக்கல், அளவாகப் புளித்த மோர் ஆகியவற்றுக்கு ஈடாக இந்த உலகையே தரலாம் என்று கூறியுள்ளார். தமிழர் பண்பாட்டில் வாழையிலைக்குத் தனித்த இடம் உள்ளது. தலைவாழை இலையில் விருந்தினர்க்கு உணவளிப்பது தமிழரின் மரபாகக் கருதப்படுகிறது. வாழையிலையில் உள்ள மருத்துவப் பயன்களை தமிழர்கள் நன்கு அறிந்திருந்தனர்.

உண்பவரின் இடப்பக்கம் வாழையிலையின் குறுகலான பகுதியும் வலப்பக்கம் இலையின் விரிந்த பகுதியும் வரவேண்டும். இலையில் இடது ஓரத்தில் உப்பு, ஊறுகாய், இனிப்பு முதலான, அளவில் சிறிய உணவு வகைகளையும் வலது ஓரத்தில் காய்கறி, கீரை, கூட்டு முதலான, அளவில் பெரிய உணவு வகைகளையும் நடுவில் சோறும் வைத்து பரிமாறுவார்கள். உண்பவர் மனமறிந்து, அவர்கள் விரும்பி உண்ணும் உணவு வகைகளைப் பரிமாறுவர்.

அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச் சங்கம் ஆண்டுதோறும் 'வாழையிலை விருந்து விழா'வைக் கொண்டாடி வருகிறது. தமிழரின் பாரம்பரிய உணவு வகைகளான முருங்கைக்காய் சாம்பார், மோர்க்குழம்பு, வேப்பம்பூ ரசம், வெண்டைக்காய் கூட்டு, தினைப் பாயாசம், அப்பளம் எனச் சுவையாக அங்கு வாழும் தமிழர்கள் விருந்தளிக்கின்றனர்.

**விருந்தோம்பல் பண்பாட்டின் மகுடம் :**

விருந்தினராக ஒருவர் வந்தால், அவரை வியந்து உரைத்தல், நல்ல சொற்களை இனிமையாகப் பேசுதல், முகமலர்ச்சியுடன் அவரை நோக்குதல், "வீட்டிற்குள் வருக" என்று வரவேற்றல், அவர் எதிரில் நின்று மனம் மகிழும்படியாகப் பேசுதல், அவர் அருகிலேயே அமர்ந்து கொள்ளுதல், அவர் விடைபெற்றுச் செல்லும்போது வாயில் வரை பின்தொடர்ந்து செல்லுதல், அவரிடம் மகிழ்ச்சியாக முகமன்கூறி வழியனுப்புதல் ஆகிய ஒன்பதும் தமிழரின் விருந்தோம்பல் பண்பின் மணிமகுடங்களாகும்.





orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores



பண்டைத் தமிழர் விருந்தினர் விடைபெறும்போது அவர்கள் செல்லவிருக்கின்ற தெருவரை ஏழு அடிகள் நடந்து சென்று வழியனுப்பினர் என்று **பொருநராற்றுப்படை** கூறுகிறது. பரிசில் பெறச் செல்லும் கூத்தர்கள், நன்னன் ஆட்சி செய்யும் பகுதியிலுள்ள வீடுகளுக்குள் உரிமையுடன் உறவினர் போலவே சென்றதையும், அந்த வீட்டிலிருந்தோர் இனிய சொற்கள் பேசி, நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும் தினைச் சோற்றையும் உணவாக அளித்தனர் என்று **மலைபடுகடாம்** கூறுகிறது.

**முடிவுரை :**

உலகிற்கு நாகரிகத்தைக் கற்றுக் கொடுத்த இனம் தமிழினம். தமிழினத்தின் பண்பாட்டுக் கூறுகளுள் தலையாயது விருந்தோம்பல். "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்ற வாக்கிற்கு இணங்க அற நெறியுடன் வாழ்ந்த பண்டைய தமிழரின் பண்பாட்டை இன்றைய தமிழர்களாகிய நாமும் பின்பற்ற வேண்டும்.

2. **மனித நேயமிக்க ஆளுமை ஒருவருக்கு குறிப்புகளைப் பயன்படுத்தி நினைவிதழ் ஒன்று உருவாக்குக. முன்னுரை – என் இளமைப் பருவம் – விடுதலைப் போராட்டத்தில் நான் – பொது நலமே தன்னலம் – எளிமையே அறம் – நாட்டின் முன்னேற்றமே நோக்கம் – எளியோரின் அன்பே சொத்து – முடிவுரை.** செப்.–2020

**நினைவிதழ் – சுதந்திர போராட்டத் தியாகி சிதம்பரனார்**

**முன்னுரை :**

ஆங்கிலேயரின் அடக்குமுறையால் நமது இந்திய மக்கள் பொங்கி எழுந்தனர். போராடினர். அவர்களில் நானும் ஒருவன் என்பதில் நான் பெருமை கொள்கிறேன்.

**என் இளமைப் பருவம் :**

எட்டையபுரத்துக்கு அருகில் ஒட்டப்பிடாரம் என்ற ஊரில் 1872-ஆம் ஆண்டு செப்டம்பர் 5-ஆம் நாள் நான் பிறந்தேன். என் தந்தையாரின் பெயர் உலகநாத பிள்ளை. தாயாரின் பெயர் பரமாயி அம்மையார். பள்ளிப் படிப்பை தூத்துக்குடியிலுள்ள புனித சேவியர் பள்ளியிலும், கால்டுவெல் பள்ளியிலும் படித்தேன். பின்னர் திருநெல்வேலியிலுள்ள இந்து கல்லூரியில் படித்தேன். அதன்பிறகு, திருச்சியில் சட்டக் கல்வி கற்று, வழக்கறிஞராகத் தொழிலைத் துவங்கினேன்.

**விடுதலைப் போராட்டத்தில் நான் :**

இக்கால கட்டத்தில் நம் நாட்டில் சுதந்திரப் போர் தீவிரமடைந்து கொண்டிருந்தது. நான் என்னுடைய வழக்கறிஞர் தொழிலை விட்டுவிட்டு, நாட்டின் சுதந்திரத்திற்காக பங்காற்ற வேண்டும் என தீர்மானித்தேன். பாலகங்காதர திலகரின் விடுதலைப் போராட்ட வழிமுறைகள் என்னைக் கவர்ந்தன. சென்னைக்குச் செல்லும் போதெல்லாம் பாரதியாரைச் சந்தித்து சுதந்திரப் போராட்டம் குறித்து பேசுவேன்.

வாஞ்சிநாதன், சுப்பிரமணிய சிவா போன்றோரும் என் செயல்பாடுகளுக்கு உறுதுணையாக இருந்தனர். ஆங்கிலேய அரசுக்கு எதிராக மக்களிடம் சொற்பொழிவுகள் ஆற்றுவதை எனது கடமையாகக் கொண்டேன். சுதந்திரப் போராட்டத்திற்கு மக்களைத் தூண்டிவிட்டதாக ஆங்கிலேய அரசு என்மீது வழக்கு போட்டு, 40 ஆண்டுகள் தண்டனை கொடுத்தது. கோவை சிறையில் நான் அடைக்கப்பட்டேன். லண்டனில், மேல் முறையீடு செய்ததில், தண்டனைக் காலம் 6 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது.

**பொது நலமே தன்னலம் :**

பொது வாழ்வில் நான் நேர்மை, தூய்மை, எளிமையைக் கடைபிடித்தேன் என்பதில் எனக்கு மகிழ்ச்சி. வழக்கறிஞராக நான் பணியாற்றிய காலகட்டத்தில், வழக்கு தொடுக்க வருபவர் பரம ஏழை என்று அறியும்போது, அத்தகைய ஏழை, எளியோரிடம் பணம் வாங்காமல், அவர்களுக்காக நியாயத்துக்காக வாதாடி, வெற்றி பெற்றிருக்கிறேன். அவர்களின் வாழ்த்துகளும், நன்றியறிதலுமே போதும் என கூறியிருக்கிறேன். உண்மையை நிலைநாட்ட வாதாடும்போது, ஏழைகளிடம் அதற்காக பணம் பெற நினைப்பது கொடுமையல்லவா? மேலும், அயல்நாட்டுப் பொருள்களை, உணவுப் பொருள்களை நிராகரித்துவிட்டு, சொந்த நாட்டில் தயாரிக்கப்பட்ட பொருள்களைப் பயன்படுத்தினேன், மற்றவர்களையும் பயன்படுத்தச் சொன்னேன்.

**எளிமையே அறம் :**

சீனாவிலிருந்தும், பிரிட்டனிலிருந்தும் கொண்டு வரப்படும் பட்டுத்துணிகளை வாங்கி ஆடையாக அணியாமல், நம் நாட்டில் விளையும் பருத்தி நூலால் நெய்யப்படும் ஆடைகளை அணிவது எளிமை மட்டுமல்ல, நமது உடல் நலத்திற்கும் நன்மை தருவதாகும்.

**நாட்டின் முன்னேற்றமே நோக்கம் :**

நம் நாட்டில் கனிம வளம், உட்பட பல வளங்கள் இருக்கும்போதும், நம் நாட்டின் முன்னேற்றத்தில் ஆங்கிலேய ஆட்சியாளர்கள் ஈடுபடவில்லை. மாறாக, பாரபட்சமான சுரண்டல் பொருளாதாரக் கொள்கையைக் கடைபிடித்தனர். ஆங்கிலேயரின் விவசாய, வணிகக் கொள்கைகள் நம் நாட்டு பொருளாதாரத்தை நாசப்படுத்தின. நம் நாட்டின் வளங்கள் பல வகைகளிலும் கொள்ளை போயின. இத்தகைய செயல்களைத் தடுக்க பல விதங்களிலும் முயற்சிகள் செய்தேன்.

ஆங்கிலேயரின் கடல் வாணிபத்தை அழிக்க வேண்டும் என எண்ணி, இரண்டு கப்பல்களை வாங்கி நான் கடல் வாணிபத்தைத் தொடங்கினேன். ஆனால் இதனைப் பொறுக்காத ஆங்கிலேய அரசு என்மீது வீண்பழி சுமத்தி சிறைத் தண்டனை வழங்கியது.

**எளியோரின் அன்பே சொத்து :**

தூத்துக்குடியில் கோரல் நூற்பாலையில் தொழிலாளர்கள் தினசரி 12 மணிநேரம் உழைத்தாலும், அவர்களுக்கு கூலி மிகக் குறைவாகவே கொடுக்கப்பட்டது. அங்கு வேலை நிறுத்தம் நடைபெற்றது. அப்போது என் சொத்தில் பெரும்பகுதியை தொழிலாளர்களுக்குக் கொடுத்து உதவினேன். இறுதியில் வேலை நேரம் குறைக்கப்பட்டு, ஞாயிறு விடுமுறை தினமானது. கூலியும் உயர்த்தப்பட்டது. இதனால் மக்களின் அன்புக்குப் பாத்திரமானேன்.

**முடிவுரை :**

சிறையிலிருந்து நான் விடுதலையான பிறகு சென்னை, கோவை, கோவில்பட்டி, தூத்துக்குடி ஆகிய இடங்களில் வசித்தேன். என் வாழ்நாளில் இந்தியா சுதந்திரம் பெறுவதை என்னால் காண முடியவில்லை என்பதில் எனக்கு வருத்தம். 1936 ஆம் ஆண்டு நவம்பர் 18-ஆம் நாள் மரணம் என்னைத் தழுவியது.





orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores



## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

**1. குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி, தலைப்பு ஒன்று தருக. முன்னுரை – தமிழகம் தந்த தவப்புதல்வர் – நாட்டுப் பற்று – மொழிப்பற்று – பொதுவாழ்வில் தூய்மை – எளிமை – மக்கள் பணியே மகத்தான பணி – முடிவுரை.** பிடிஏ–1

**முன்னுரை :**

இந்திய விடுதலைக்காகப் பாடுபட்ட எண்ணற்ற பாரத மைந்தர்களுள் வ.உ.சிதம்பரனார் மிக முக்கியமான ஆளுமை ஆவார். அவரைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**தமிழகம் தந்த தவப்புதல்வர் :**

எட்டையபுரத்துக்கு அருகிலுள்ள ஒட்டப்பிடாரம் என்ற ஊரில் உலகநாத பிள்ளைக்கும் பரமாயி அம்மையாருக்கும் 1872ஆம் ஆண்டு மகனாகத் தோன்றினார். தன் கல்லூரிப் படிப்பை முடித்தவுடன் எழுத்தராகப் பணியாற்றினார். பின்னர் திருச்சி சென்று சட்டம் பயின்று வழக்கறிஞரானார்.

**நாட்டுப்பற்று :**

நாட்டில் சுதந்திரப் போர் தீவிரமடைந்து கொண்டிருந்த காலகட்டத்தில் அவர் தன்னுடைய வழக்கறிஞர் தொழிலை விட்டுவிட்டு நாட்டு விடுதலைக்காகப் பணியாற்ற, தன்னை விடுதலை இயக்கத்தில் இணைத்துக் கொண்டார். பாலகங்காதர திலகரின் வழியில் சென்ற வ.உ.சி அவர்கள் தமிழகத்தில் விடுதலைப் போரைத் தீவிரப்படுத்தினார். சுப்பிரமணிய சிவா, பாரதியார், வாஞ்சிநாதன் போன்றோர் வ.உ.சியின் செயல்பாடுகளுக்கு உறுதுணையாக இருந்தனர். தன் பேச்சுக்களாலும் எழுத்துகளாலும் மக்கள் மனதில் விடுதலை உணர்வைத் தூண்டினார். சுதேசி இயக்கத்தை வளர்த்து அந்நியப் பொருள்கள் மற்றும் துணிகளை எரித்தார். உள்நாட்டுப் பொருள்களை வாங்குமாறு மக்களை ஊக்கப்படுத்தினார்.

ஆங்கிலேயரின் கடல் வாணிபத்தை அழிக்க வேண்டும் என்று எண்ணிய வ.உ.சி அவர்கள் கடும் முயற்சிகளைத் தாண்டி இரண்டு கப்பல்களை வாங்கி கடல் வாணிபத்தைத் தொடங்கினார். அவர் வெற்றியைப் பொறுக்காத ஆங்கிலேய அரசு அவர்மீது வீண் பழி சுமத்தி இரட்டை ஆயுள் தண்டனை வழங்கியது. சிறையில் கசையடி பெற்றார்; கல்லுடைத்தார்; செக்கிழுத்தார். நம்மை சுதந்திர இந்தியாவில் வாழவைப்பதற்கு அவர் எண்ணற்ற துன்பங்களை அடைந்தார்.

**மொழிப்பற்று :**

தாய்நாட்டை எந்த அளவு நேசித்தாரோ அந்த அளவு தாய்மொழியான தமிழையும் நேசித்தார். மெய்யறம், மெய்யறிவு, பாடல் திரட்டு, சுயசரிதை ஆகிய நான்கு நூல்களை இயற்றியுள்ளார். இன்னிலை, சிவஞானபோதம், திருக்குறள் ஆகிய நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். திருக்குறள் (மணக்குடவர் உரையுடன்), தொல்காப்பியம் (இளம்பூரணர் உரையுடன்) ஆகிய நூல்களைப் பதிப்பித்துள்ளார். விவேக பானு, இந்து நேசன், தி நேஷனல் ஆகிய பத்திரிகைகளில் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். ஜேம்ஸ் ஆலன் என்பவர் எழுதியுள்ள நான்கு நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

**பொதுவாழ்வில் தூய்மை – எளிமை :**

பொது வாழ்வில் தூய்மையைக் கடைபிடித்தார். வழக்கறிஞராக அவர் இருந்தபோது ஏழை மக்கள் மீது கொண்ட அனுதாபத்தினால் பலமுறை பணம் வாங்காமல் வாதாடி வெற்றி பெற்றுள்ளார். பணத்திற்காக வாதாடாமல் ஏழைகளுக்காகவும் உண்மைக்காகவும் வாதாடினார். அந்நியத் துணிகளை உடுத்துவதற்கு அனுமதிக்கவில்லை.

**மக்கள் பணியே மகத்தான பணி :**

தொழிலாளர் நலனுக்காக உழைத்தார். கோரல் மில் தொழிலாளர்களுக்கு பிரச்சனை ஏற்பட்டபோது, உடனிருந்து உழைத்து அவர்களுக்காகப் பாடுபட்டார். தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட்டார். கல்வியறிவைப் பெற முடியாத மாணவர்களுக்கு உதவி செய்து அவர்கள் கல்வி கற்க உதவி செய்துள்ளார். மக்களுக்கு செய்யும் சேவைகள் மகேசனுக்கு செய்யும் சேவைகள் எனக் கருதினார்.

**முடிவுரை :**

நாட்டிற்காக, நாட்டு மக்களுக்காக உழைத்த வ.உ.சி அவர்கள் இந்நாடு விடுதலையடைந்த போது உயிருடன் இல்லை. 1936ஆம் ஆண்டு நவம்பர் 18 அன்று உயிர் நீத்தார். தமிழகம் தந்த தவப்புதல்வனை எண்ணி பாரதத்தாய் கண்ணீர் வடித்தாள்.

**2. குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதித் தலைப்பிடுக.**

**குறிப்புகள் : முன்னுரை – சாலைப் பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு – சாலை விதிகள் – ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் – விபத்துகளைத் தவிர்ப்போம், விழிப்புணர்வு தருவோம் – முடிவுரை.** பிடிஏ–3

**முன்னுரை :**

ஒவ்வொரு நாளும் செய்தித்தாள்கள் மூலமாகவும் தொலைக்காட்சி வாயிலாகவும் சாலைவிபத்துகள் பற்றிய செய்திகளை நாம் அறியமுடிகிறது. இக்கால கட்டத்தில் சாலை விபத்துகள் மிக அதிக அளவில் நடைபெறுகின்றன. இதனால் எண்ணற்ற உயிர்கள் பலியாகின்றன. உடலின் உறுப்புக்களை இழந்து தவிப்போர் எண்ணிக்கையும் அதிகமாகிவிட்டது. இதற்கெல்லாம் சாலைவிதிகளை நாம் மதிக்காமல் நடப்பதே காரணமாகும்.

**சாலை பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு :**
**"தலைக்கவசம் நமக்கு உயிர்க்கவசம்"**

இரு சக்கர வாகன ஓட்டிகள் தவறாமல் தலைக்கவசம் போட்டுக் கொண்டு வாகனங்களை ஓட்ட வேண்டும். போக்குவரத்துக் காவல்துறையினரின் கட்டளையை மீறி நாம் செல்லக்கூடாது. வாகனங்களில் அதிவேகம் இருக்கக் கூடாது. வாகனம் ஓட்டுபவர்களுக்கென கூறப்பட்டுள்ள சாலைவிதிகளைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும். சாலையில் அந்தந்த வாகனங்களுக்கு



orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores



உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வண்டி ஓட்ட கூடாது. சாலையில் பாதுகாப்புடன் வாகனங்களை இயக்கி உயிர்பலியை தவிர்ப்போம்.

**சாலை விதிகள் :**

சாலையில் விபத்துகள் நேரிடா வண்ணம் தடுப்பதற்காக, போக்குவரத்துக் காவல்துறையினர் பணிசெய்கின்றனர். மேலும் பல இடங்களில் வண்ண விளக்குகள் மூலமாக சாலை போக்குவரத்து நெறிப்படுத்தப்படுகிறது. போக்குவரத்தினை முறைப்படுத்தும் குறியீடுகளுக்கும் போக்குவரத்துக் காவலர்களின் சாலை உத்தரவுகளுக்கும் ஏற்ப சாலையை பயன்படுத்த வேண்டும்.

**ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் :**

சிவப்பு வண்ண விளக்கு 'நில்' என்ற கட்டளையையும் மஞ்சள் வண்ண விளக்கு 'தயாராக இரு' என்ற கட்டளையையும், பச்சை வண்ண விளக்கு 'புறப்படு' என்ற கட்டளையையும் நமக்குத் தருகிறது. இடது பக்கம் செல்லவேண்டும் என்பது சாலை விதிகளில் முக்கியமானதாகும். பாதசாரிகள், நடப்பதற்கான நடைமேடையில் செல்ல வேண்டும். எதிர்த்திசையில் சாலைகளைக் கடக்கும்பொழுது, அதற்கென கோடு போட்டிருக்கும் இடத்தில்தான் கடக்க வேண்டும்.

**விபத்தினைத் தவிர்ப்போம் விழிப்புணர்வு தருவோம் :**

இரு சக்கர வாகனங்களில் இருவருக்கு மேல் பயணிக்கக்கூடாது. பேருந்துகளில் பயணம் செய்யும் போது படிக்கட்டுகளில் நிற்கக் கூடாது. வண்டி ஓட்டுபவர்கள் உடல்நிலை, மனநிலை பாதிக்கப்பட்டிருக்கும் பொழுது, கண்டிப்பாக வண்டி ஓட்டக்கூடாது. மதுவருந்திவிட்டு வண்டி ஓட்டுதல் சட்டப்படி குற்றமாகும். எந்தவொரு வண்டியையும் முந்திச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்துடன் செல்லக்கூடாது.

**முடிவுரை :**

'உயிர் விலைமதிப்பற்றது' மனித உயிர் மட்டுமல்ல; பறவைகள், விலங்குகள் என்று அனைத்து உயிர்களுமே விலை மதிப்பற்றவை. சாலை விபத்தின் போது அந்த ஜீவன்களும் பாதிக்கப்படுகின்றன. எனவே சாலை விதிகளை நாம் பின்பற்றி நடக்க வேண்டும்.

"சாலை விதிகளை மதிப்போம்
விலை மதிப்பில்லா உயிரைக் காப்போம்."

3. **"விசும்பின் துளியும் பசும்புல் தலையும்" என்னும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு குறிப்புகளைப் பயன்படுத்தி கட்டுரை ஒன்று எழுதுக.**

**குறிப்புகள் : முன்னுரை – இயற்கையோடு இயைந்து வாழ்வோம் – வானத்து மழைநீரைப் பூமியில் காப்போம் – மழைக்கு ஆதாரமான மரங்களை வளர்ப்போம் – முடிவுரை.** பிடிஏ–3

**(அல்லது)**

**விசும்பின் துளியும் பசும்புல் தலையும் – காற்று மாசு – பசுமையைக் காப்போம் – மரம் நமக்கு வரம் – மழைநீர் உயிர் நீர். – இக்குறிப்புகளைப் பயன்படுத்தி 'இயற்கையைக் காப்போம்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.** பிடிஏ–6

**முன்னுரை :**

"விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண்ப தரிது. – திருக்குறள் – 16

வானத்திலிருந்து மழைத்துளி வீழ்ந்தால் அன்றி உலகில் ஓரறிவுடைய பசும்புல்லைக்கூட காண முடியாது. நீரில்லாமல் உலகமே இயங்காது. அதனால்தான் இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் "மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்" என்று மழையைப் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

**இயற்கையோடு இயைந்து வாழ்வோம் :**

இயற்கை என்பது நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற பஞ்சபூதங்களால் ஆனது. இயற்கை இல்லையென்றால் உயிரினங்கள் இவ்வுலகத்தில் வாழ முடியாது. இதனை நன்கு உணர்ந்திருந்த பழங்காலத்து மக்கள் தங்களின் வாழ்வை இயற்கையோடு இணைத்தே வாழ்ந்தார்கள். அவர்களின் வாழ்வு இயற்கையோடு இரண்டறக் கலந்திருந்தது. இயற்கையை நேசித்தார்கள், பாதுகாத்தார்கள், அதனால் பருவமழை பொய்க்காமல் பொழிந்தது. காடுகள் மற்றும் மலைகள் சிறந்த அரண்களாக விளங்கின. இயற்கை முறையில் விவசாயம் செய்து தரமான உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து நோயற்ற வாழ்வு வாழ்ந்தனர்.

இயற்கை வளங்களை மனிதன் தன் சுயநலங்களுக்காக அழிக்கிறான். காடுகளை அழித்து தொழிற்சாலைகளாகவும், பெரிய பெரிய குடியிருப்புகளாகவும் மாற்றியதாலும், விளைநிலங்களை விளைநிலங்களாக மாற்றியதாலும் மனிதன் பல இன்னல்களுக்கு ஆளாகிறான். இயற்கையை நாம் அழித்தால், பேரிடர் வடிவில் அது இந்த உலகை அழிக்கும். எனவே இயற்கையைப் போற்றி அதனுடன் இயைந்து வாழவேண்டும்.

**வானத்து மழைநீரைப் பூமியில் காப்போம் :**

பருவமழை பொழிகின்றபோது, மழைநீரை வீணாக்காமல் அதனைச் சேமித்து வைக்க வேண்டும். மழைநீரில் 50 சதவீதம் வீணாகக் கடலில் கலப்பதாகக் கூறப்படுகிறது. ஒவ்வொருவர் வீட்டிலும் மழைநீர் சேகரிப்பிற்கான தொட்டியைக் கட்ட வேண்டும். இதனால் வீடுகளில் பெய்யும் மழைநீர் தெருவில், சாக்கடைகளில் ஓடி வீணாகாமல் அவரவர் வீட்டில் தேக்கிவைக்கப்படும். இதனால் நிலத்தடிநீர் மட்டம் உயருகிறது.

இதே போல் பொது சொத்துகளான குளம், குட்டை, ஏரி, கிணறு போன்ற நீர்நிலைகளை தூர்வாரி ஆழப்படுத்தினால், அதிகளவு மழைநீரை சேமிக்க முடியும். பொது இடங்களான பள்ளிகள், கோயில்கள், தொழிற்சாலைகள், வணிகவளாகங்கள் போன்றவற்றிலும் மழைநீர் சேகரிப்புத் திட்டங்களைக் கட்ட வேண்டும்.

**மழைக்கு ஆதாரமான மரங்களை வளர்ப்போம்:**

மழை பொழிவதற்கு ஆதாரமான மரங்களை வெட்டாமல் பாதுகாக்க வேண்டும். மரம் இல்லையேல் மழை இல்லை; மழை இல்லையேல் இந்த உலகில் உயிர்கள் இல்லை; மரங்கள் நாம் வெளியிடும் கரியமில வாயுவை ($CO_2$) எடுத்துக் கொண்டு தூய்மையான உயிர்வளியை ($O_2$) நமக்குத் தருகின்றன.



orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores



நமக்கு தேவையான காய் கனிகளைத் தருவதுடன், மருந்துப் பொருள்களைத் தரும் விருட்சமாக இருக்கும் மரங்களை நாம் அதிகமாக வளர்க்க வேண்டும். 'வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்' என்ற வாசகத்தை 'ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' என மாற்ற வேண்டும். மனிதர்கள் மரம் வெட்டுவதை நிறுத்த வேண்டும்.

**முடிவுரை :**

காடுகளை அழித்து தொழில் நகரமாக மாற்றாமல், சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்தாமல், மழைநீரை சேகரித்து இயற்கையோடு இயைந்து வாழ்ந்தால் நோயற்ற இன்பமான வாழ்வை நாம் வாழலாம்.

**4. குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதி தலைப்பு ஒன்று தருக.**

**குறிப்புகள் : முன்னுரை - தமிழன் அறிவியலின் முன்னோடி - விண்வெளியும் கல்பனாச் சாவ்லாவும் - விண்ணியல் அறிவில் நமது கடமை - முடிவுரை.** பிடிஏ–4; செப்.–2020

**விண்ணியல் அறிவு**

**முன்னுரை :**

உயிரினங்களில் மனிதரை வேறுபடுத்திக் காட்டுவது அவர்களின் சிந்தனையே ஆகும். சிந்தனைகள் மேம்படும்போது மனிதன் தன்னைச் சுற்றியுள்ள பொருள்களை ஆராய்கிறான். அவற்றுள் ஒன்றுதான் விண்ணியல் குறித்த ஆய்வாகும்.

**தமிழன் அறிவியலின் முன்னோடி :**

தமிழர், பண்டைய காலத்தில் தங்கள் வாழ்வியலோடு அறிவியலையும் இணைத்துக் கொண்டவர்கள். சங்க இலக்கியங்களிலும் பக்தி இலக்கியங்களிலும் அறிவியல் கருத்துகள் நிறைந்துள்ளன. பெருவெடிப்புக் கொள்கைப் பற்றிய இன்றைய அறிவியல் கூறும் கருத்துகளை சங்ககால இலக்கியங்களில் நமது முன்னோர்கள் முன்பே சொல்லிவிட்டனர்.

"விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்
கருவளர் வானத்து இசையில் தோன்றி."

எனத் தொடங்கும் பரிபாடலில் புலவர் கீரந்தையார் அண்டத்தோற்றம் குறித்து இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகளில் ஒன்றுகூட மாறாமல் கூறியுள்ளது, வியப்பை அளிக்கும் செய்தியாகும்.

அமெரிக்க வானியல் வல்லுநர் எட்வின் ஹப்பிள் 1924-இல் நம் பால்வீதி போன்று பல பால்வீதிகள் உள்ளன என்பதைக் கண்டறிந்தார். ஆனால் 1300 ஆண்டுகளுக்கு முன்பே மாணிக்கவாசகர் தான் இயற்றிய திருவாசகத்தில் திரு அண்டப் பகுதியில் நூறு கோடிக்கும் மேலான பால்வீதிகளைக் குறிப்பிட்டுள்ளார்.

**விண்வெளியும் கல்பனா சாவ்லாவும் :**

விண்வெளிக்கு பயணம் செய்த முதல் இந்திய விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா. விண்வெளி ஆராய்ச்சியில் சிறந்தவர் நல்ல திறமையுடைய பெண் ஆராய்ச்சியாளர் இவர். இந்தியாவே போற்றும் வகையில் விண்வெளியில் மிகச் சிறந்த சாதனை செய்தவர் இவர் எனலாம். 1995-ஆம் ஆண்டு நாசா விண்வெளி வீரர் பயிற்சிக் குழுவில் சேர்ந்த கல்பனா சாவ்லா, கொலம்பியா விண்வெளி ஊர்தியான எஸ்.டி.எஸ் - 87இல் பயணம் செய்வதற்குத் தேர்வு செய்யப்பட்டார். முதல் இந்திய கொலம்பிய விண்வெளி ஊர்தியான எஸ்.டி.எஸ் - 87-இல் விண்வெளி பயணம் மேற்கொண்டார். இந்த விண்வெளி பயணத்தில் சுமார் 372 மணி நேரம் விண்வெளியில் இருந்து சாதனைப் புரிந்து வெற்றிகரமாகப் பூமி திரும்பினார்.

**விண்ணியல் அறிவில் நமது கடமை :**

அனைத்துக் கோள்களையும் இன்றைய அறிவியல் ஆராய்ந்து வருகிறது. மனிதன் வாழத் தகுதியான கோள் எது என்பதையும் ஆராய்ந்து வருகிறது. விண்ணியல் குறித்து ஆராய விரும்பும் மாணவர்களுக்குத் தேவையான ஊக்கத்தை நமது அரசாங்கம் அளிக்கின்றது. விண்ணியல் ஆய்வில் நாம் கண்டறிந்த உண்மைகளை உலக அரங்கில் எடுத்துரைக்க வேண்டும். நமது முக்கியக் கடமை எதுவென்றால், நம் நாட்டில் படித்துவிட்டு சேவைகளை வெளிநாட்டுக்குக் கொடுக்கக்கூடாது. நம் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்த வேண்டும்.

**முடிவுரை :**

"வானை அளப்போம். கடல்மீனை அளப்போம்" என்ற பாரதியின் கனவை நனவாக்கி விட்டோம். இந்திய விண்வெளி ஆய்வில் புதிய சரித்திரங்கள் பலவற்றைப் படைப்போம்!

**5. முன்னுரை– உழவே தமிழர் பண்பாட்டின் மகுடம் - உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம் - சுழன்றும் ஏர்ப்பினது உலகம் - முடிவுரை.**

**இக்குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதி பொருத்தமான தலைப்பிடுக.** பிடிஏ–4

**உழவின் மேன்மை**

**முன்னுரை :**

சங்கத் தமிழரின் திணை வாழ்வு வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டது. உழவுத் தொழில் செய்வோரே மற்ற தொழில் செய்வோருக்கும் அச்சாணி போன்றவர்கள். உழவு என்பது, தொழிலாக இல்லாமல் தமிழரின் பண்பாடாகவும் திகழ்ந்தது.

**உழவே தமிழர் பண்பாட்டில் மகுடம் :**

'வேள்' என்னும் சொல்லின் அடியாகப் பிறந்த 'வேளாண்மை' என்ற சொல்லின் பொருள் கொடை, ஈகை ஆகும். நிலம் நமக்கு உணவு என்னும் கொடையை வழங்குவதால் உழவுத்தொழில் வேளாண்தொழில் எனப் பெயர் பெற்றது.

எந்தவொரு தொழிலைப் பற்றியும் பேசாத திருவள்ளுவர் 'உழவு' என்ற ஓர் அதிகாரத்தையே படைத்துள்ளார். 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' என்ற பழமொழி உழவர்களை மையப்படுத்தி ஏற்பட்டது. சங்கத் தமிழர் காலத்தில் உழவுத்தொழில் உயர்வாக இருந்த காரணத்தினால் பண்டைய இலக்கியங்களில் உழவு உயர்நிலையில் வைத்து பாடப்பட்டுள்ளது.

பண்டைய தமிழர் எந்த மண்ணில் எந்தப் பயிர் செய்ய முடியும் என்று அறிந்து வைத்திருந்தனர். ஐவகைத் திணைகளுள் மருதம் என்பது வயலும் வயல் சார்ந்த இடங்களைக் குறிக்கிறது. புலவர்களின் பாடல்களில் இந்த நிலப்பகுதி உழவுத் தொழிலுடன் கூடியதாக இருந்தது. கம்பர் 'மேழி பிடிக்கும் கை வேல்வேந்தர் நோக்கும் கை" என்று கூறியுள்ளார். "ஏர்பிடித்து உழவு





orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores



செய்கின்ற கைகள் வேற்படையைக் கையில் பிடித்துள்ள மன்னர்களும் எதிர்பார்க்கின்ற கைகள்" என்று கம்பர் புகழ்ந்துள்ளார்.

உழுதல், விதைத்தல், தொழு உரமிடுதல், நீர்பாய்ச்சுதல், களையெடுத்தல், காத்தல் முதலியன நம் தமிழர் மேற்கொண்ட இயற்கை வேளாண் கூறுகளாகும்.

**உழவுத்தொழிலுக்கு வந்தனை செய்வோம் :**

அனைவரும் உண்ணுவதற்காக உணவைத் தந்து, தாமும் உண்டு வாழ்கின்றவரே உரிமையுடன் வாழ்பவர். மற்றவர் எல்லாரும் அடுத்தவரைத் தொழுது அவர்பின் செல்வர்கள் ஆவர். உழவருடைய கை உழாமல் மடங்கிவிட்டால் "யாவரும் விரும்புகின்ற எல்லாப் பற்றையும் விட்டுவிட்டோம்" என்று கூறும் துறவியரும் அவ்வறத்தில் நிலைத்து நிற்க முடியாது. எனவேதான் ஔவையார் எந்த மன்னரை வாழ்த்தினாலும் 'மன்னர் வாழ்க!' என்று கூறாமல் "உன் நாட்டில் வரப்புகள் உயர்க" என்று வாழ்த்துவார். எனவே உழவுத் தொழிலுக்கு நாம் வந்தனை செய்வோம்.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்!
-வீணில்
உண்டுகளித்திருப்போரை நிந்தனை செய்வோம்!"
– பாரதியார்

**சுழன்றும் ஏர்பின்னது உலகம் :**

உழுவதால் ஏற்படும் மெய்வருத்தத்தை நோக்கிப் பிறதொழில்களைச் செய்து வாழ்ந்தாலும் முடிவில் ஏர்த்தொழில் செய்பவரையே உலகம் எதிர்நோக்கியிருக்கிறது. இதனை வள்ளுவர்

"சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை." – திருக்குறள் (1031)

என்று கூறியுள்ளார். உழவுத்தொழில் செய்பவர்கள் பிறரிடம் சென்று இரவார். தம்பால் இரப்பவர்க்கு அவர் வேண்டுவதை ஈவர்.

**முடிவுரை :**

உலகோரின் பசிப்பிணியை நீக்கும் உழவுத்தொழில் மேன்மையடைய வேண்டும். உயர் கல்வி கற்ற பலரும் இன்று இயற்கை வேளாண் முறையை விரும்பி உழவுத்தொழில் செய்கின்றனர். படித்த அனைவருமே இரண்டாம், மூன்றாம் நிலைத் தொழில்களுக்குப் போய்விட்டால் முதல் நிலைத் தொழிலான விவசாயம் அழிந்து விடும் என்று பட்டதாரிகள் உணர ஆரம்பித்துவிட்டனர். இதற்கு மறைந்த 'நம்மாழ்வார்' என்ற இயற்கை வேளாண் விஞ்ஞானிக்கு அனைவரும் நன்றி கூற வேண்டும்.

**6. உங்களைக் கவர்ந்த எவரேனும் ஓர் அறிஞர் அல்லது அரசியல் தலைவர், தம் வாழ்வில் நடந்த நிகழ்வுகளைத் தாமே சொல்வதைப்போன்று தன் வரலாறாக மாற்றி எழுதுக.** பிடிஏ–4

அப்துல்கலாம்

**முன்னுரை :**

1931ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ஆம் நாள் இராமேஸ்வரத்தில் ஜைனுல்லா மரைக்காயர் – ஆஷிமா தம்பதியருக்கு மகனாகப் பிறந்தேன். என் வாழ்க்கை வரலாற்றில் நடந்த நிகழ்வுகளை உங்களிடம் பகிர்ந்து கொள்வதில் பெருமையடைகிறேன்.

**இளமைக்காலம் :**

என்னுடைய பள்ளிப் படிப்பை இராமேஸ்வரத்தில் உள்ள அரசுப் பள்ளியில் தமிழ்வழிக் கல்வி மூலம் தொடங்கினேன். அறிவியல் மற்றும் கணிதப் பாடங்களில் சிறுவயது முதலே ஆர்வம் கொண்டிருந்தேன். பத்திரிகை விற்பனை செய்த என்னுடைய உறவினருக்கு உதவி செய்து அதன் மூலம் கிடைத்த வருமானத்தை என் படிப்புக்காக செலவு செய்தேன். பள்ளிப் பருவத்தில் கல்விச் சுற்றுலா சென்றிருந்தபோது பறவைகள் எவ்வாறு பறக்கின்றன என்பதை ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன். இதுவே பின்னாளில் நான் விமானத்தை வடிவமைக்க தூண்டுகோலாக இருந்தது.

**கல்லூரிப் படிப்பு :**

1954–இல் இயற்பியல் பிரிவில் இளங்கலைப் பட்டம் பெற்றேன். 1955–இல் சென்னையிலுள்ள எம்.ஐ.டி.யில் 'விண்வெளி பொறியியல்' படிப்பைத் தொடங்கினேன்.

**விமான வடிவமைப்பு :**

எம்.ஐ.டியில் படித்து முடித்த பின் உள்நாட்டுத் தொழில்நுட்ப அறிஞர்களின் உதவியுடன் உள்நாட்டில் கிடைத்த பொருள்களைக் கொண்டு 'நந்தி' என்ற விமானத்தை வடிவமைத்து இயக்கியும் காட்டினேன்.

**பணி :**

1983–இல் இந்தியப் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவராகவும், பாதுகாப்பு அமைச்சக அறிவியல் ஆலோசகராகவும் பொறுப்பேற்றேன்.

**சாதனைகள் :**

இந்தியாவில் முதன்முறையாக 1974–இல் **'சிரிக்கும் புத்தர்'** என்ற திட்டத்தில் அணுவெடிப்புச் சோதனை நிகழ்ந்தது. அத்திட்டத்தில் பங்கேற்ற 60 விண்வெளி பொறியியல் அறிஞர்களுள் நானும் ஒருவனாக இருந்தது எனக்குப் பெருமையளிக்கிறது. 1980–இல் இந்தியாவின் முதல் செயற்கைக்கோள் எஸ்.எல்.வி.3 என்ற ஏவுகணையைப் பயன்படுத்தி ரோகிணி–I என்ற துணைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தினேன்.

1998 ஆம் ஆண்டு 'ஆப்ரேஷன் சக்தி' என்ற திட்டத்தின் மூலம் பொக்ரான் அணுவெடிப்புச் சோதனையில் முக்கியப் பங்காற்றினேன். இந்தியாவை அணு ஆயுத வல்லரசாக மாற்ற வேண்டும் என்ற என்னுடைய கனவு நனவானது. 2002 முதல் 2007 வரை இந்தியக் குடியரசுத் தலைவராகவும் இருந்துள்ளேன்.

**விருதுகள் :**

இந்திய அரசின் உயரிய விருதான 'பாரத ரத்னா' விருது எனக்கு வழங்கப்பட்டது. 23 பல்கலைக்கழகங்கள் 'டாக்டர் ஆஃப் சயின்ஸ்' என்ற பட்டத்தை வழங்கியுள்ளன. ஆர்யபட்டா விருது, நேரு விருது, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் வழங்கிய 'டாக்டர் ஆஃப் ஃபிலாசபி', விஸ்வபாரதி பல்கலைக்கழகம் வழங்கிய 'தேசிகோத்தமா' ஆகிய பட்டங்கள் எனக்கு வழங்கப்பட்டன. இவ்விருதுகள் யாவையும் எனக்கு மட்டும் உரித்தானவை அல்ல; என்னுடன் சேர்ந்து உழைத்த அனைவருக்கும் உரித்தானவை.



orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores



**முடிவுரை :**

அறிவியல் மீது எவ்வளவு பற்று கொண்டிருந்தேனோ அந்த அளவு தாய்மொழி மீதும் பற்றுக் கொண்டிருந்தேன். எனக்கு மிகவும் பிடித்த நூல் திருக்குறளாகும். ஏவுகணைகளை விண்ணில் ஏவிய நான் பலமுறை மாணவர்களின் கேள்விக் கணைகளை எதிர்கொண்டு பதில் அளித்துள்ளேன். இளைஞர்களுக்கு நான் கூற விரும்புவது, “கனவு, கனவு, கனவு; இதனை சிந்தனை வடிவமாக்குங்கள், பின் செயலாற்ற முனைப்படுங்கள்” என்பதாகும்.

7. **குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதி தலைப்பு ஒன்று தருக.**

**குறிப்புகள் : முன்னுரை - மொழிபெயர்ப்பு நூல்கள் - எட்டுத்திக்கின் கலைச்செல்வங்கள் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் - மொழிபெயர்ப்பு கல்வியே - முடிவுரை.**

பிடிஏ–5

**மொழிபெயர்ப்புக் கலை**

**முன்னுரை :**

மொழிகளுக்கு இடையேயான வேற்றுமைகளை நீடிக்கவிடாமல், ஒற்றுமைப்படுத்த உதவுவது மொழிபெயர்ப்பு ஆகும். எங்கோ தொலைதூரத்தில் வாழும் மனிதர்கள் தங்கள் மொழியில் எழுதியவற்றை நமக்குத் தெரிந்த மொழியில் மொழிமாற்றம் செய்வதே மொழிபெயர்ப்பு ஆகும்.

**மொழிபெயர்ப்பு நூல்கள் :**

‘மொழிபெயர்த்தல்’ என்ற தொடரைத் தொல்காப்பியர் மரபியலில் குறிப்பிட்டுள்ளார். “மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்” என்ற சின்னமனூர்ச் செப்பேட்டில் உள்ள குறிப்பு சங்க காலத்திலேயே தமிழில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டதை புலப்படுத்துகிறது. வடமொழியில் வழங்கிய இராமாயண, மகாபாரத செய்திகள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், இராவணகாவியம், வில்லிபாரதம் போன்ற காப்பியங்கள் வடமொழிக் கதைகளைத் தழுவிப் படைக்கப்பட்டன.

திருக்குறள் 107 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. புறநானூற்றை ஜி.யு. போப் மற்றும் ஜார்ஜ் எல். ஹார்ட் ஆகியோர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளனர். தேம்பாவணி என்ற நூல் ஆங்கிலத்தில் ஆகிர்தமேரி என்பவர் எழுதிய ‘தேவமாதாவின் வரலாறு’ என்ற நூலைத் தழுவி வீரமாமுனிவரால் எழுதப்பட்டதாகும். இரட்சணிய யாத்திரிகம் என்ற நூல் ஆங்கில நூலாசிரியர் ஜான்பனியன் என்பவர் எழுதிய ‘பில்கிரிம்ஸ் புரோகிரஸ்’ என்ற நூலைத் தழுவி ஹெச். ஏ. கிருட்டிணனாரால் எழுதப்பட்டதாகும்.

மனோன்மணீயம் என்ற நூல் லிட்டன் பிரபு என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய ‘இரகசிய வழி’ என்ற நூலைத் தழுவி பெ. சுந்தரனார் அவர்களால் எழுதப்பட்டதாகும். இரவீந்தரநாத் தாகூர் வங்காள மொழியில் எழுதிய **கீதாஞ்சலியை** அவரே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பின்புதான் அவருக்கு **நோபல் பரிசு** கிடைத்தது.

1942இல் ஹஜிராபாக் எழுதிய ‘வால்காவிலிருந்து கங்கை வரை’ என்ற இந்தி நூலை கணமுத்தையா என்பவர் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். இதுவரை பல பதிப்புகள் வெளிவந்துள்ளன.

**எட்டுத்திக்கின் கலைச்செல்வங்கள் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் :**

உலகிலுள்ள மொழிகள் அனைத்திலும் உள்ள இலக்கியங்கள் கலைகள் யாவற்றையும் தமிழ்மொழிக்கு கொண்டு வரவேண்டும் என்று பாரதியார் விரும்பினார்.

“சென்றிடுவீர் எட்டுத் திக்கும் – கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்.”

என்று பாரதியார் கூறுகிறார். உலகின் அனைத்து திசைகளுக்கும் சென்று அங்குள்ள கலைச்செல்வங்களை இங்கு கொண்டு வரவேண்டும் என்பதோடு “தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்” என்றும் கூறுகிறார்.

**மொழிபெயர்ப்புக் கல்வி :**

மொழிபெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவை நாம் பெற முடியும். மனிதவளம், வேலைவாய்ப்புத் தளம் போன்றவற்றை விரிவாக்க முடியும். இந்திய நாடு விடுதலை பெற்ற பின்பு இங்கு அமைக்கப்பட்டுள்ள பல நாட்டுத் தூதரகங்கள் தங்களுடைய இலக்கியம், பண்பாடு, தொழில்வளர்ச்சி, கலை போன்றவற்றை கற்றுக் கொடுப்பதன் மூலம் அவரவர் மொழிகளை இங்கு அறிமுகப்படுத்துகின்றன. சில தனியார் நிறுவனங்களும் பிறமொழிகளைக் கற்றுத் தருகின்றன. பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பிற மொழிகளைக் கற்கும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**முடிவுரை :**

சாகித்திய அகாதெமி நிறுவனமும் தேசிய புத்தக நிறுவனமும் பல மொழிகளிலிருந்து நல்ல படைப்புகளை இந்திய மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளன. கருத்துப் பரிமாற்றம், தகவல் பகிர்வு, அறநூல் அறிதல், இலக்கியம், தத்துவம் ஆகியவை மொழிபெயர்ப்பு வழியாகவே சர்வதேசத் தன்மை பெறுகின்றன. மொழிபெயர்ப்பு இல்லாவிடில், கம்பனும் ஷேக்ஸ்பியரும் பெரும் புகழோடு இருந்திருக்க முடியாது.

8. **குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று படைக்க.**

**குறிப்புகள் - முன்னுரை - மனித வாழ்வு அறம் சார்ந்தது - இலக்கியம் காட்டும் அறம் - அறத்தான் வருவதே இன்பம் - அறவாழ்வே பண்பாட்டின் உச்சம் - அறம் என்பதே மனிதம் - முடிவுரை.**

பிடிஏ–2,6

**முன்னுரை :**

பண்டைத் தமிழர் இல்வாழ்க்கையை அறவாழ்க்கையாக வாழ்ந்தனர். ஒருவருடைய வாழ்க்கைக்கு அறத்தைவிட நன்மையானது வேறு எதுவும் இல்லை. அறம் மக்களுக்குச் சிறப்பையும் செல்வத்தையும் நல்கும்.

**மனித வாழ்வு அறம் சார்ந்தது :**

மனித வாழ்வானது அறத்தை சார்ந்தே அமைந்துள்ளது. தர்மங்களைச் செய்வது போல





orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net
www.CBSEtips.in

2022-23 EDITION

SURA'S 10TH STD SCHOOL GUIDES




Updated New Edition

Call @
9600175757
8124301000
orders@surabooks.com

Buy Online @ surabooks.com

Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com